KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலையம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ஞு ஜூன் மீ 20உ [No. 25.

OFFICE OF THE REGISTRAR ... N 1929

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)		481
2.	எமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B.A., B.L.		482
3.	அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.		484
4.	மாறன் பாப் பாவினம் (K. நாராயண ரெட்டிகாரு அனுப்பிய பிரதி)		486
5.	பட்டினத்துப்பிள்ளையார் T. R. இராஜகோபால்		487
6.	தமிழ்ப் பாடம்		489
7.	குலசேகரர் T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.		492
8	கும்பகர்ணன்—R. முத்தையர்		494
9.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L.		495
10	வர்த்தமானம்		496
11.	அட்டவணை		497

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலையம்

189060

இவ்வாண்டு முதலிதழ்த் தலையங்கத்தில் நாம் விளம்பியுள்ளபடி அடுத்தவாரம் நமது காரியாலயத்திற்கு ஓய்வுநாட்க ளாகுமாதலால், இத்தொகுதியின் முதலாறு திங்கள் இன்றோடு நிறைவெய்து கின்றது. இதுவரையில் வந்துள இதழ்களை அட்டையிட்டுக் கட்டிடம் செய்துகொள்ளச் சிலர் விரும்பலாம். அன்னதற்கியன்ற வண்ணம் பொருள் அட்டவணையொன்று சேர்த்துள்ளோம்.

தமிழிலக்கண இலக்கியப் பயிற்சிக்குப் பாடமாக நாம் எடுத்துக்கொண்ட 'நளவெண்பா' முடிந்தது. இனிப் பிள்ளைபெருமாள்ஐயங்கார் இயற்றிய அஷ்டப் பிரபந்தங்களில், திருவேங்கடமாலை துவக்கப் பெறும். நமது நண்பர்களிற் பலர் இத்தமிழ்ப்பாடங்களை மாணவர் முறையில் தளரா ஊக்கத்துடன் நன்கு பயின்றுவருகின்றனரென்பது அறியப் பெரிதும் மகிழ்கின்றோம். அன்னவர்க்கு இனித் தமிழிலக்கியத்தில் எந்நூலும் திறக்கவல்லதாகும் என்பதற் கையமில்லை. கம்பர் வள்ளுவர் போன்ற தெய்வப்புலமையோர் அருளிய பொருளுரைகளை ஓதித் தாம் மகிழ்தற்கு இயலாவண்ணம், தம் தாய்மொழியேயோ இடைகிடந்து தடுத்தல் வேண்டும், எனப் பரிபவர் குறையினைப் பெரும்பகுதி களைந்துதவுமாறு நம்தமிழ்ப்பாடங்கள் அமைக்கப்பெற் றிருக்கின்றனவாதலால், கலாநிலயத்தின் கட்டுரைகள் சில விளங்குதற் கருமையென நினைக்கும் நிலையில் இருப்போர் யாவரும் இப்பாடங்களைமட்டு மேனும் ஊன்றிப் படித்து வருதல் பலவித நலங்களுக்கு ஆதாரமாயிருக்கும். கவிகளைப் பயில்வதேயல்லால் உயிரெடுத்த ஊதியம் இல்லை பிற.

அரசியல் முதலிய வாதங்களின் அமைதியின்மையைக் கலாநிலயம் காட்டிவருவது பத்திரிகையுலகத்தில் ஒருசிறிது புதுமையா யிருக்கலாம். எனினும், எந்நாளும் அது உள்ளங்கை நெல்லிக்கனியே. ஓட்டமும் பிடியும் வழக்கும் வசையுமா யிருப்போர்க்குத் தம் உள்ளங்கையைப் பார்ப்பதற்கு நேரமில்லாத குறையால் அந்நெல்லிக்கனிதான் நோக்கப்பெறாது போகின்றது. அலைப்புணும் மாந்தர் மனதைச் சிறிது நேரமேனும் ஒருமுகப் படுத்தவல்ல இரவீந்திரநாதர், அரவிந்தர், கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டென்னிஸன், அனைய மேன்மக்களது உறவுபற்றி நிற்பதால் கலாநிலயம் அந்நெல்லிக்கனியைக் காட்டிவைக்கின்ற பொறுப்பு எளிதில் ஆற்றலாகின்றது. அரசியல் சீர்திருத்தங்களில் முனைந்திருப்பவர்களில் ஒரு சிலரேனும் மேலுரைத்த அறிவுடையோர் நூல்களைப் படித்திருப்பார், உண்மையே எனினுந் தற்காலம் அன்னவர் உறவை இவர் மறந்திருக்கின்றனர். கேளாது விட்டது கடன் என்பது போல், பயிலாது விட்ட நட்பு இது. ஆதலின், அறிவுச்சுடர் ஆங்காங்கு உதிக்கும் பல குன்றுபோன்ற இப்பெரியார் தத்துவங்களைப் படித்திராதார்க்கு அவைகளின் உண்மை ஆற்றலையும், படித்தும் மறந்திருப்பார்க்கு அன்னவர் நினைவையும், எடுத்துரைத்து, அவ்வறிவின் ஆட்சிக்குரிய இறையைச் செலுத்தச் செப்புமாறு எவ்வெவர் திறத்தும் வந்தெய்துகின்ற இக்கலாநிலயம் தூதனுக்கு ஏற்றதோர் ஆதனத்தை எங்கும் பெறும்.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

6. பத்தினியின் பாக்கியம்

470 பக்கத் தொடர்ச்சி

பேரர்தோடார்ந்த தனயனும் சேனையும் மீண்டும் ஊர் புகுந்து வந்தநாள், சிங்கமுகனது அரண்மனையிலிருந்த கோச்சனங்கள் என்றுமில்லாதவோர் பரிசு களிசிறந்தனர். வேந்தனும் நகரவாயில்எதிர்கொண்டு தன் மகனை வரவேற்றனன் நம்பியொடு தேரூர்ந்து நங்கையும் வருதற்காண, நகர மாக்கள் நன்றுநன்றென நவின்று துளங்கினர்.

தந்தையின்முன் வாசவச்செம்மலும் வனிதையர் திலகமும் இரதம்விட் டிறங்கி அவன் தாள்கள் பணிந்திட, அரசன் பஞ்சரவல்லிக்கு ஆசிகள்கூறித் தன் மதலையைத் தழுவியெடுத்து மார்புறப் புல்லினன். ஆண்டிருந்த அனைவரும் உவகையால் ஆரவாரம் செய்தனர். புஜங்கக்கள்வன் எங்கே எங்கே, என்று கேட்டவர் வாய்மொழி இம்முழக் கொலியினிடையே ஆழ்ந்துபோயது. மன்னனும் மைந்தனை நோக்கி, "வாசவ, நினக்குயான் துணையளித்தவொரு வலவச்சிறுவனைக் காண்கிலேன். ஏழை யவன் போரினில் பட்டனன் கொல்லோ? இழந்தனையோ அவ்விளவலை நீ?" என வினவப், பூங்கொடி நாணமுற்றுப் பெயர்ந்திடுவது போல் ஈரடி விலகிநல்கும் அரிவைக்கு ஓர் புன்னகை போக்கி வாசவன், "தேர்த்தொழில் ஒன்றுமேயலாது ஜாலவித்தையும் தேர்ந்துளன் நீ தந்த சாரதி. வலவனை யிழந்து நானிவ் வனிதையைப் பெற்றேன், பெற்றேன். தலமுழுதாளும் தந்தாய், சமர்தனில் உன்றன் மைந்தன் சலமுற நின்றபோது சாகசம் செய்துகாத்த நலந்திகழ் நங்கைதானும் இங்கிவள் அன்றோ" என்றான்.

"புஜங்கன்யாது ஆயினன். தீயவனாயினு மவனுக்குத் தீதொன்று மிலதே?" என்று மைந்தன்சொல்லை மகிழ்ச்சியொடு கேட்ட அரசன் வினவினன்.

"தீது உற்றனன்; எனினும் அஃது அவன் அறியான். ஒருகண் இழந்தானுகி உணர்வும் ஒழிந்து மருளால் மழுங்கிய சிந்தையோடு ஆங்கு ஓர் தேரினில் வருகின்றனன். உண்மையை விற்றதால் அவன் பெற்ற ஊதியம் சிறியதே என்று எண்ணுகின்றேன்."

இவ்வுரை செவியேற்ற சிங்கமுகன் அடிவயிற்றினின்றும் நெடிதோர் மூச்செடுத்து விடுத்தனன். இக்காற்று அடித்துவந்ததென ஒளிமழுங்க வொரு மேகம் அவன் முகத்தில் படர்ந்தது. பேசுவதற்கொன்றும் நாவெழவில்லை. தந்தையின் முகம் இவ்வாறு வாடியதுகண்ட இளவரசன், ஓராது தான் உரைத்ததற்கு மிகவருந்தி, அதை மாற்றும்வண்ணம் "ஐய, புஜங்கனது கண்ணைப் போக்கியவனும் ஒரு மடக் கவியே. சாபாலனும் அவன் பேர். காக்கைப் புராணம் பாடிய கீர்த்தியினை நாட்டுவதற்கு அவன் கடாரத்தில் கால்வைத்த காரணத்தால் இத்தீங்கின் பெரும்பகுதி நேர்ந்தது. பரணியும் பாடிக் கவிசக்ரவர்த்தியாகவே இரணகளத்துள் மீண்டும் இட்டகால் உடைந்திட அவனும் பின்னொரு பண்டியில் வருகின்றான்," என்று சாபாலனது செய்தியைச் சொல்ல ஆரம்பித்தபோது தணிந்த உலையைத் துருத்திகொண்டூதுவதுபோல் அரசனுக்கு ஆயிற்று.

புஜங்கனும் புலவனும் ஏனைய படைவீரரும் பட்டதொரு கஷ்டநஷ்டத்திற்கெல்லாம் தானும் மெய்யை மறைத்து ஒழுகியது சிறிதளவு ஏதுவாயிருந்ததால் மன்னவன் அவர்தமை எதிர் நோக்குவதற்கு வெள்கினன். பஞ்சரவல்லியை அவள்பிதாவுடன் நேராகத் தன்மனைக்குப்போகுமாறு அனுப்பிவிட்டுப் படைஞரையும் அவரவர் இல்லங்களுக்கு விடைதந்து போக்கி வேந்தனும் மகனுடன் தனதகம் சேர்ந்தனன். சேர்ந்த வாசவன் அருள்சுரந்து எதிர்வந்த அன்னையை அடிபணிந்து, போருடை களைந்து நன்னீராடி உண்டியுமருந்தி ஈன்றோர் இருவருக்கும், அகன்ற நாள்முதல் அன்றுவரை அவன் செய்ததும் கண்டதும் கேட்டதும் யாவும் ஆதியோடந்தமாய்த் தெரியச் சாற்றினன். இவைதம்மில் பஞ்சரவல்லியைச் சார்ந்த பாகத்தில் ஆங்காங்கு இரண்டொரு நிகழ்ச்சிகளை அவன் விழுங்கிவிட்டதும் வியப்பன்று.

புஜங்கன் போகுமிடம் செப்பாது போயின நாள் முதல் அசோகவதி அமர்ந்திருந்த கற்புநிலையின் அருமை அறைதற் கொண்ணுமோ! எங்குச்சென்று தன்னுயிர்க்கும் புகழிற்கும் என்ன கேடு தேடினனோ, எனும் அச்சம் அவளை அலைத்து வந்தது. முடிவினில் அவள் தனது நாயகன் பகைவரொடு படையெடுத்து வந்தனன் என்பது கேட்க, வேடன் விடு சரம்பாய்ந்த மானெனமயிலெனப் பதைத்துருகிப் "புவியே வேண்டிப் பாவியெனும் நாமம் படைக்கவா! என் இறையே, நானிருக்க, நம்மருமைப் பெண்ணிருக்க, அன்பே உருவாய அரசனுமிருக்க, நீ பெற்ற பேரெல்லாம் தொக்கிருக்கக், கோமருகன் வருதற்கிருக்க,எல்லாம் கடந்து நினக்கும் தீயனாய் மற்றெவர்க்கும் பொல்லனாய் ஆகியே போகவே புரிந்தனையே, தலைவா; நான் செய்த தீவினைதான் நின்னையும் கெடுத்ததோ! குலதெய்வங்காள், ஏழையேன்என்கொழுநன் கண்கெட்டு மதிகெட்டு உழலவும் காணவே விழைந்ததேனோ!" என்று புலம்பித் தன் கண்வடித்த இரத்தத்தால் தரை மெழுகிச் சாம்பினாள். எழுந்திருப்பாள். தூணிலே தளர்ந்து சார்வாள், பெண்பிறந்து தான் ஆனவிதம் நன்றென நகுவாள், நெட்டுயிர்ப்புவீங்குவாள், வயிறு குலைய விம்முவாள், வாய்தனைக் கையால் பொத்தி வெற்றிடம் நோக்குவாள். அடியற்ற கதலிபோல் நிலத்திலே சாய்வாள். கூந்தலும் தானும் துயருமாய் மண்மீது புரளுவாள். கண்ட திசையெலாம் அவளுக்கிருண்டு தோன்றின.

இத்தகைய தெருமரல் எய்திய தாயின்முன் அன்று பஞ்சரவல்லி வந்து நின்றதும் 'ஐயகோ, பெண்ணே, தெய்வம் செய்த சதி ஈதடீ' எனக், கேட்டதறியும் தளர்ந்திரங்க ஓலமிட்டாள். "தாயே, நீயழுதால் சிறுமியான் என் செய்வேன்; வேண்டா, அம்மா, அழேல்!" என்று அன்னையை இம்மகள் பரிவுடன் தேற்றி ஓர் மெல்லிய சயனத்தில்சேர்த்து விரைவில் அகன்றனள். அன்று பகல், படைதிரண்டெழுந்த ஆரவாரம் கேட்கக்கேட்க அசோகவதி, 'என் நாயகன்மீது இந்நகர் படையெடுக்கவும் ஆயதோ' என்பதை உன்னிஉன்னி முட்பாயல் படுத்தவொரு அனிச்சமென் பதுமைபோல் அங்கங் குலையப் புரண்டழுவதாயினள். அற்றைநாள் அனிகம் எழுந்த துழனியால் இவள்தனக்கு உற்ற துன்பமோ கொடியது. உருண்ட தேரனைத்தும் இவள் கழுத்திலே உருண்டன. மண்ணை மிதித்த வீரரெல்லாம் இவள் மார்பிலே மிதித்தனர். குதிரையின் குளம்பனைத்தும் இவள் மெய்யிலே புதைந்தன. இவள் தலைதனை இடறாது சென்ற யானையுமொன்றில்லை. ஏகுமிப்படை தன்னருங் கணவனைப் பற்றிவந்து துரோகி இவன் என்று ஊர்வலம்கொண்டுபோய்க் கழுமரம் ஏற்றுமே என்னுமோர் எண்ணமாம் எரிமலை கக்கிய அனற்குழம்பின் அகப்பட்டுப் பொறி கலங்கி உணர்வற்றுப் போயினள்

மறுநாட் காலைவரையில் அசோகவதிக்குத் தன்னினைவு வந்திலது. இரவுகாத்து அவளருகு வீற்றிருந்த தாதியரும் சேடியரும் துயர்சிறிது நீங்க அவளும் கண்திறந்து, "பஞ்சரவல்லியை அழைத்து வம்மின்" என்று ஏவுதலும், அவர் "தாயே, நின் மகள் இவ்விரவு மனைக்கு வந்திலள்" என்பதன் முன்னே, "பாவியேன் என்னைப் பெண்ணும் துறந்தாளோ!" என வருந்தினள். தாதியர் தாம் சென்று பஞ்சரவல்லியைத் தேடிவருவதாகச் செப்பினர். அது பயன்படாதென்பது இவளுக்குத் தெரியும். போரஞ்சாப் பஞ்சரவல்லி போனஇடத்தினை அவள் ஒருவாறு ஊகித்தாளெனினும் ஆட்களையனுப்பி ஊர்தேடவிட்டாள். ஆனால், வாசவனே தலைவனாய்ச் சேனையுடன் போயுளான் என்பது அவள் செவிக்கு எட்டியதும் தன்பெண் அகன்றதன் காரணத்தில் அவளுக்கு ஐயமே இல்லை. பெருந்தீங்கு நேராமல் புஜங்கனைக் காத்தற்கும் இவள் ஏதுவா யமையலாம் என்னும் நோக்கத்தால் அசோகவதியின் மனமும் சிறிது தேறியது.

அருளேனும் பொருளேனும் அளவில்லா தளிக்க வந்த வள்ளல்மக்கள், தருவதன்முன் பாத்திரத்தின் தகுதிதன்னைச் சீர்தூக்கித் தாழ்தல்செய்யார். அதனினும் அம்ம! கற்புடைய மாதர்க்குக் கொண்டவன் அளவளவு தம்காதல் எனும் துலாக்கோல் தன்மை மறந்தும் தோன்றாது. தீக்கானகத்திலே நள்ளிரவிலே பேயும் பாய்புலியும் திரியுமென நினையாது தன்னைப் பாழ்மண்டபத்திலே நீத்தகன்ற கொண்கனைக் குறித்துக், கழுத்திற்குக் கீழெல்லாம் விழுங்கிய வாளரவின் வாயுள்மூழ்காமுன், 'இன்று உன் திருமுகம் காண்கிலேன், மன்னவா, அஃதொன்றே குறை' என்ன ஏக்கமுற்ற பெருந்தகைத் தமயந்தி தனது அன்பை நிறுத்துத்தான் பகர்ந்தாளோ! நளன் வெறுப்பினால் விட்டகன்றிலன் என்பதுணர்வாளாலும், சான்றோர் இகழும் கவறுடிச் சந்தியிற்கொணர்ந்து தன்னை நிறுத்தினன் என்னும் குற்றம் பாராட்டாத பெண்மையை வீமன்தன் திருமடந்தை ஆண்டு, கற்புநடாத்தினாள்.

புஜங்கனது மனைவி, வீமன்மகளின் நல்லள் என எடுத்துக்காட்டவும் வேண்டுமோ! தீக்குணம் செறிந்த சித்தமுடையவனாய்த் தனதன்பையும் இதவசனத்தையும் மதியாது எள்ளி உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்யும் துரோகியுமாகிய புஜங்கனைப் பக்தியொடு பின்னும் நினைத்து, அவன் மானமும் உயிரும் பழுதுறுவிதம் பஞ்சரவல்லி ஏதேனும் ஆக்க வல்லளோ என்று ஆசைகூர்ந்த அசோகவதியன்றோ இவ்வுலகில் கற்பினின் திப்பியக் கொழுந்து மேல் அடர்ந்து படர்வதற்கு ஒரு கொழுகொம்பு போல்பவள்.

அனையவள் தனது பிரிவுநிலைக்கு உரிய விரதமெல்லாம் வளர்த்துக் கடவுள் நினைவு விட்டகலா உள்ளத்தினளாய் நாட்களைக் கழித்துவந்தாள். அரசனது மாளிகைக்கு நாடோறும் ஆளனுப்பிப் போர்வதந்தி ஏதேனும் உளதாயின் கேட்டுவரச் சொல்வதுண்டு. இன்றைக்கு, போனபடை திரும்பிவிட்டதென்பது உணர நீங்காஉயிரை இதுகாறும் தான் தாங்கியிருந்த பயன் யாவதாகுமோ எனும் ஆற்றாமை குடிபுகுந்து அவள் மனத்தை மேன்மேலும் உழக்கியது. கூண்டினில் அடைத்த பைங்கிளியொக்கத் தன் மனையுனுள் அலைந்தனள். சிறிது நேரத்திற்குள் தேரும் வந்து அம்மனைப்புறம் நிற்பதுணர்தலும், முன்வாயில் விரைந்தோடத் தளர்நடைப் பாலகற்குக் கால்பெயர்க்கக் கற்பிக்கும் செவிலியெனப் பஞ்சரவல்லி புஜங்கனை அழைத்துவருவதைக் கண்டாள். கண்டவுடன் எதிர் சென்று அவன் இருதாள் பணிந்து எழுதலும் அவனுக்குக் கண்ணொன்று இலாமை தெரியச் சிறிது துன்புற்றாளேனும், பற்றிய தீமைதான் கண்ணொடு கழிந்ததற்கு உவகையே எய்தித் "தலைவ, என்பால்எப்பிழையுளதேனும் பொறுத்து வாடுமென் உயிர்தளிர்க்க ஒருசொல் சொல்லிடாயோ," என்று அவன் கரங்களை எடுத்து மனைக்குள் அழைத்தேகினள் பஞ்சரவல்லியும், இவன் மனமற்று மருள்கொண்ட நிலையைத் தன் தாய்க்கு எடுத்துரைத்து அது நிகழ்ந்தவாறும் பிறவும் செப்ப அன்றைப் பொழுது முடிவடைந்தது.

மறுநாட் காலையில் புஜங்கன் இருந்த நிலை காணுமாறு மன்னனும் மைந்தனும் அவன் மனைக்கு ஏகினர். வந்தவர்க்கு அசோகவதி வந்தனைபுரிந்து தவிசிட்டுத் தொழுதனளாய் அயல்நிற்க, வேந்தன் தன் தானைத்தலைவன் முகத்தை உற்று நோக்கி வெய்துயிர்த்து, "அம்மே, நின்கணவன் பட்டதற்கு நானுமொரு காரணமாய் நிற்கின்றேன். வாய்மை யான் விலகியிரேனாயின் இப்புஜங்கனும் தீமைதான் செய்திரான், உற்றுமிரான். கற்புடையாய், நும்வயின் நான் செய்த பிழையைப் பொறுத்தி! இவ்வீரேழுலகினும் மருத்துவ சாஸ்திரத்தில் இவன் தன் நயனம் பெற்று நோய்தீர மருந்து ஒன்று உளதேல் அதை நான் நன்னாடு விற்றேனும் நல்கி வைப்பேன்," என அசோகவதிக்கு இரக்கமொடு செப்பினன்.

"எளியேங்கள்பால் கருணையால், மாசற்ற மன்னவா, உனக்கே ஓர் வசை கற்பித்து ஏற்கின்றாய். எங்கள் தீவினை உளவாக, ஏமாங்கதத் திறைவன்தன் தூய்மையும் தேயுமோ! அரசே நின் நாடுகிடக்க, என்னுயிரையே விருப்புடன் தருகின்றேன், அந்த வைத்தியனைத் தேடி அனுப்புவாய்."

சிங்கமுகனும் அது செய்வதாக வாக்களித்துப் பின், புஜங்கன் மகுடம் சூடாது வாசவனுக்குப் பெண்ணளிக்க மறுத்ததும், தானே நாட்டிற் பாதி கொடுப்பதை அவன் ஏற்க இயலாது பஞ்சரவல்லி தான் தடுத்ததும், அதற்காகக் கடாரத்திற்கு அவனைப் பொய்ப்போர் தேடிவர இவன் அனுப்பியதும், ஆதலால் அப்புஜங்கன் தன்மேல் பகையால் படையெடுத்து வந்ததில்லை யென்றும், இவைகளுக்குச் சார்பான ஏனைய விடயங்களையும் அசோவதிக்குக் கூறினன். இந்தச் சரித்திரத்தில் சிற்சில பாகங்கள் அருகிருந்து கேட்டுவந்த காதலர் இருவருக்கும் புதுமையே. இவைகளை யெல்லாம் கேட்கக்கேட்க அசோகவதி ஆழ்ந்திருந்த அல்லல்நின்றும் மெள்ளமெள்ள மிதந்தெழுந்தாள். தன் நாயகன் துரோகியல்லன் என்பதுணர அவளுடைய உள்ளமும் உடலும் பூரித்துப் பெருத்தன. நெஞ்சில்நின்ற நஞ்சு மகன்றது. ஆகையால், அரசுவேண்டி யுழன்றது தூயகுணம் அன்றாயினும், அவன் மன்னனிடம் பகை பாராட்டியது சங்கேதப்படி நடித்தவொரு பொய்ப்பகைதான் என்பதையுன்னுங்கால் நிகரற்ற பாக்கியவதி தானே என மதிக்கலாயினள். புஜங்கன் கடைசியில் சரபசூரனுடன் உறவுகொண்டு வாசவன் சேனையை வெல்லவே கருதிய கருத்தும் அதன்படி நடந்த சில நிகழ்ச்சிகளும் ஒருவரும் சரிவர அறிந்திலர். கடாரப் படைத்தலைவன் வாசவனுக்கு உரைத்ததில் இது வெளிப்படையாயில்லை. வாசவன் தன் தந்தையிடம் இதைப்பற்றிச் சொன்னவரையில் சங்கேதத்திற்கு விரோதமாகப் புஜங்கன் ஒன்றும் செய்ததாகக் கண்டிலன். புஜங்கன் போர்க்களம்நண்ணிக் கண்ணிழந்தவிதம் எதுவென்று அவனே சொன்னாலன்றி அறிய இயலாது. வேந்தன் மனத்தில் சிறிது அளவு இந்த வகையில் சந்தேகம் இருந்தபோதிலும் பெருந்தன்மையால் அதை அவன் அசோகவதிக்குக் காட்டவில்லை. பார்க்குங்கால், புஜங்கனது நடத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் 'மாபாலமொன்றினை மாத்தினில் இட்டதேபோல்,' ஒன்றிற்கொன்று தொடர்ச்சி விளங்காமலே எல்லோர்க்கும் இருந்தது.

எதுவாயினும், அசோகவதி நிதியெலாம் இழந்தபின் அதை மீண்டும்பெற்ற அளகேசன் எனலாயினள். தன் காதற்கிழவன் மதித்தெளிவை இழந்திருந்

OFFICE OF BOOKS 3- 1929 MADRAS

தது ஒன்றே குறை. அக் குறையும் மருந்தினால் மாற லாம். கண்ணென்று இல்லான் எனின் என்! காந்தாரி புருடனுக்கு இருகண்ணு மில்லை. அசோகவதியின் மனதில் உதித்த எண்ணங்களை ஓர்ந்தான்போல் சிங்கமுகன், போரினில் பஞ்சரவல்லி தனது இன்னுயிர்ப் புதல்வனது உயிரைக் காத்தவிதமும் கூறி அவள் மகிழ்விற்கு மகிழ்வுசெய்து இனிதின் விடை பெற்றுத் தன்கோயில் போயினன்.

பண்டிதர் முயற்சியாலும் மனைவியின் தவத்தாலும் சிலதினங்களில் புஜங்கனது நோயும் தீர்ந்தது. மெள்ளமெள்ள அவன் தன் நினைவைப் பெறலாயினன். கண்தான் இழந்த வொளியைப் பெற்றதில்லை. ஆயினும் அவ்வூனம் புறத்திலே தோன்றாவண்ணம் போலிக்கண்ணென்று கண்ணாடியால் செய்து அமைத்தனர். சொல்லொணாத் துன்பமாம் தீயிலே உருகியதால் ஆசையெனும் மாசெலாம் பொசுங்கி மீண்டு வந்த அவன்மதியும் வேற்றுருவே எடுத்து நல்லதாயிற்று. புத்திகெட்டுப் பொய்தொடர்ந்து கிளையுறவும் மனையறமும் நினையாது, இட்டளித்த வேந்தனது அருள் வெள்ளத்தில் ஆடாது, பாபப் படுகுழியில் விழுந்துழன்ற விதிக்குப் புஜங்கன் இப்பொழுது முழுமனதோடு வருந்தினான். புத்திரியும் பத்தினியும் இதவசனங்களால் அவன் நொந்தமனதை ஆற்றிவந்தனர். கண்ணைக் கெடுத்தேனும் தெய்வம் மதியைக் கொடுத்ததே என்று அனைவரும் அடைந்தவோர் உற்சாகத்திற்கு அளவோ இல்லை.

* * * *

கணிதர் குறித்தநாளில் நாரிகைக்கும் கோமகற்கும் கடிமணம் நடந்தது. புரவலனும் அவன் பரிஜனங்களும் நங்கையிவள் ஒப்பாள் ஈங்கில்லை எனக் களிசிறந்தனர். மங்கலமுரசு எங்கும் முழங்கின. மாலையிட்டு ஊசலாடி மணைமேல் மணமக்கள் அமர்ந்தனர். "மைந்த, வாய்மையும் வீரமும் என நீ என் மாமகளோடு நீடூழி வாழ்க" என்று மாதுலன் தன் குலக் கொடியை நனி புனலொடு கோமகற்கு அளித்தனன். திருநாண் தரித்து, அங்கியைப் பன்னியொடு வலம் கொண்டு, அம்மிமிதித்து அருந்ததிகண்டு, பொரியிட்டு மணமகன், வேள்விக்குரிய வினையனைத்தும் செவ்விதின் முடித்தனன். பிறகு மணமக்களிருவரும் கைப்பற்றிப் பெரியோர் தாள்தொழ ஏகினர். "என் செல்வி, நீ செய்த தவந்தான் என்னே!' எனப் புஜங்கன் தன்மகளை வாழ்த்தினன். "வாசவ, நீ பிறந்த அன்றிலும், பெண்மையால் அழகினால் குணநலத்தினால் நின்பால் அன்பினால் நம்குலம் விளக்க வந்த இத் திருமகளனையாளை நீ பெற்ற இன்று பெரியதோர் உவகை யெய்தினேன்" என்று மன்னவன் தனதிளவலைப் புகழ்ந்தான். கால் பணிந்தெழுந்த மருகனையும் மகளையும் அசோகவதி கண்ணினால் வாழ்த்தினாளே யன்றி வாய்திறந்து ஆசிகள்கூறவோ அவளுக்கு இயன்றதில்லை. சிங்கமுக மன்னவன் ஆடையும் பொன்னும் அணிகலன்களும் கொள்க கொள்க வென யாவர்க்கும் வீசியளித்து உளமகிழ்ச்சியோடு தனது மண்டபம் சேர்ந்தான்.

"பாற்கடல் கடைந்து முன்னாள் வானவர் அமிர்தம் எடுத்தனர். அவ்வமிர்தத்தைக் கடைந்து நான் அதன் இரசத்தைக் கவர்ந்துகொண்டேன்" எனக் காதலரிருவரும் தனித்தனி ஏம்பல் அடைந்தனர்.

இன்னவிதம் திருமணம் நிகழ்ந்து சிலநாட்களான பின் வேந்தனும் வாசவனுக்கு முடிசூட்ட நிச்சயித்தான். பூமகளைப் பெற்ற தன் புதல்வன் புவிமகளையும் மணத்தல் காணவேண்டுமெனும் ஆசை அரசனுக்கு ஒரு புறமிருக்கத், தான் ஒருசிறிது பொய்யிற்கு உடன்பட்ட காரணத்தால் இனிக் குடியோம்பிப் பாராள உரியனல்லன் என்னும் தூய சிந்தையும் மைந்தனது மகுடாபிஷேகத்தைத் துரிதப்படுத்தியது. மன்னவன்தன் கருத்தின்படி இக்கருமமும் நல் ஓரையினில் நிறைவேற அனைவரும் இனிதின் வைகினர்.

மரகதத் திளவரசன்

முற்றிற்று.

அப்பர்

4. பெரியபுராணத்தில் காணாத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்.

[477வது பக்கத் தொடர்ச்சி

2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளின் முற்பகுதி. சீர்காழியில் அப்பர் பாடியது முதல் திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

VII ஏழாம் தொகுதி.

இனி, திருவாஞ்சியத்திற்கும் திருவீழிமிழலைக்கும் சமீப மெனத்தக்க சில திருப்பதிகளின் அப்பர் தேவாரங்களை நோக்குவோம். அங்ஙனம் ஒன்றாய்ச் சேர்த்துப் பார்க்கக்கூடிய ஸ்தலங்கள்:—

(31) திருமீயச்சூர், திருமீயச்சூ ரிளங்கோயில் (32) திருக்கொண்டீச்சரம் (33) திருமருகல் (34) திருப்பள்ளியின் முக்கூடல் என்பனவாம். இத்தலங்களின் திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்களை ஆராய்வோம்:—

31. திருமீயச்சூர்—திருமீயச்சூ ரிளம்கோயில்:—

திருமீயச்சூரில் சம்பந்தர் பதிகம் ஒன்றும், திருமீயச்சூரிளங்கோயிலில் அப்பர் பதிகம் ஒன்றும் திரு

பேரளம் சந்தி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கே ஒரு மைலில் திருமீயச்சூர் இருக்கின்றது. திருமீயச்சூர் ஆலயத்தின் வடக்கு ஆவரணத்தில் திருமீயச்சூர் இளங்கோயிலிருக்கிறது.

இதற்குத் தெற்கே 6மைலில் திருவீழிமிழலை ஸ்தலம். இது, அப்பர் திருஆக்கூரிலிருந்து திருவீழிமிழலைக்குச் செல்லும் வழியில் தரிசித்திருக்கலாம்.

நன்னிலம் ஸ்டேஷனுக்கு மேற்கே கற்சாலை மார்க்கமாய் 1½ மைலில் ஆற்றுக்குத் தென்கரையில் திருக்கொண்டீச்சரம் இருக்கிறது.

இதிலிருந்து தென்மேற்கே 4½ மைலில் திருவாஞ்சியம் இருக்கிறது.

அப்பர் திருவீழிமிழலையினின்று திருவாஞ்சியத்திற்கு இப்பதியின் வழியாய்ச் சென்றிருக்கலாம்.

நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து 4மைலில் கிழக்கே திருப்புகலூர், வர்த்தமானீச்சரம். இதினின்று சற்றுத் தென்கிழக்காய் 3மைலில் திருமருகல் இருக்கின்றது. இது திருச்செங்காட்டங்குடியினின்று அப்பர் திருநள்ளாறு சென்ற வழியென்று அநுமானிக்கலாம்.

வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே ஒரு மைலில் திருப்பள்ளியின்முக்கூடல் என்கிற அரிக்கரியான் பள்ளி யிருக்கிறது. இதினின்று தென்மேற்கில் 2மைலில் திருவாரூர் இருக்கிறது. இதற்கு அப்பர் சென்றகாலம் பெரும்பாலும் திருவாரூரிலிருந்து திருப்புகலூருக்குச் செல்லும்போது வழியில் தரிசித்த ஸ்தலமென்று நாம் பூகோளநிலையால் அநுமானிக்கலாம்.

முறையில் உள. அப்பர் பாடுங்காலத்தில் "தோற்றும் கோயிலும், தோன்றிய கோயிலுமாய்" மீயச்சூர் திருப்பதி விளங்கியது என நாம் அனுமானிக்கலாம். "மேகமுரிஞ்சு பொழில் சூழ்" திருமீயச்சூரில், மல்லிகை, செண்பகம் பூக்கும் வசந்தகாலத்தில் அப்பர் அங்குச் சென்றதுபோல், "ஏறுகொண்டுயர்ந் தார்" இளங்கோயிலைப் பாடியருளினார். இவ்வூரின்கண் சங்கீதம்பொலிந்து விளங்கியவண்ணமும், இளங்கோயில் வண்ணமும் *, இடுக்கண்தீர்க்குமென்றும், அதிலுள்ளசாந்தவெண்ணீற்றினனைப் பந்தனைசெய்து பாவிக்கச் சிந்தனை திருந்துமென்றும், திருநாவுக்கரசு நாயனார் செய்யுட்களா லனுமானிக்கலாம் †.

(32) திருக்கொண்டீச்சரம். இத்திருப்பதியில் அப்பர் பாடிய திருநேரிசைப் பதிகம்-1ம், திருக்குறுந்தொகைப் பதிகம்-1-ம், திருமுறைகளிற் காணலாம். இவ் விருபதிகங்களும், அப்பர் தேவார தத்துவவிளக்கப் படலங்கள் என்னலாம். அப்பர் திருநேரிசைப் பதிகத்தில், "வரைகிலேன் புலன்களைந்தும் வரைகிலாப் பிறவிமாயப், புரையிலே யடங்கினின்று புறப்படும் வழியுங் காணேன்" என்னும் முறையிடும் வேண்டுகோள், பஞ்சேந்திரியக் கொடுமையைப்பற்பல விதங்களாய் எடுத்துக்காட்டும் ‡.

இதன்றியும் இப்பதிகங்கள், அப்பர் சரித்திர வரலாற்றில் நாம் இதுவரையிற் கண்டறியாதனவும் புலப்படுத்துகின்றன $. அப்பர் யௌவன பருவத்தில் சமணத்திலிருந்து மீண்டதாகவும், அவர் காலம் முற்றும் பிரமசாரியாய்க் கழித்தாரென்றும் நாம் எண்ணுகின்றோம். பெரியபுராண வரலாறு அங்ஙனம் வெளிப்படையில் வற்புறுத்திக் கூறாவிடினும் நாம் அவ்வாறே யெண்ணி இலக்கிய ஆராய்ச்சி செய்யாதிருப்போமென்று அநுமானித்துச் சேக்கிழார்பெருமான் திருநாவுக்கரசுநாயனார் புராண முதலிலும் இறுதியிலும் தான் கர்ணபரம்பரையில் கதை கேட்டதைக் கேட்டவாறு எழுதினதாயும், இதன் சம்பந்தமாய்த் தான் கேட்போருக்கு விடையளிப்பதற்கு அருகரல்லரென்றும் தெரிவித்தார். இதனை நாம் உற்று நோக்கில், இலக்கிய ஆராய்ச்சியில் நிபுணரான சேக்கிழார், இலக்கிய ஆராய்ச்சிநூல் எழுதப்புகாமையால் பெரியபுராணத்தில் இலக்கியஆராய்ச்சி கூறுவது பொருந்தாதென்று பின்வரும் புலவர்களுக்கு அத் தொழிலை வைத்துக் குறித்துக் காட்டினர்போல் அவர் சொற்பிரயோகங்கள் காணப்படுகின்றன. திருநாவுக்கரசு சுவாமிகள் இல்லறம் நடத்திப் பிறகு அதனை வெறுத்தாரெனில், அதனால் அவர் பெருமை யதிகமாகுமன்றி அவரைத் தாழ்த்தாது *.

திருநாவுக்கரசுநாயனார் சமணமதத்தினில் பற்று வைத்து அதை யேற்றதும் பல ஆராய்ச்சிகள் செய்த பின்னரே யாம். அக்காலத்தில் பிராமணர் யாகங்களென்று "நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக் கொல்ல" நினைக்கும் குற்றங்களை ஆமோதியாது ஜீவகாருண்யமே சிறந்த அறமென்று சமணமதத்தைத் தழுவினார். "காத்தாள்பவர் காவ லிழந்தமையாற் கரைநின்றவர்" இவரைக்கண்டு தம்வசமாக்க, அந்நெறியில் நின்றகாலை, அத்தேய மன்னன் பல்லவன் சிறக்கச் சமணமனைவியைப் பெற்று இல்லறம் செவ்வனே நடத்தியதாகக் காணப்படுகின்றது†. பின்னர்ச் சமணமதத்தை விட்டகன்றது, சிவபெருமான் திருவருளாயினும், சூலைநோயா லென்பது நியாயமாகக் காணப்படவில்லை. இவர் உயிரை ஒரு திரணமாக வெண்ணியவர். யாதுக்கும் அஞ்சினவ ரல்லர். ஆராய்ச்சியில் தேறத்தேறச் சமணவொழுக்கங்கள் தவம் என்று அவஞ் செய்வதை நன்குணர்ந்தார். உயிர்க்கொலையொழித்தல் நலமாயினும், புலால் மறுத்தலொன்றாலேயே முத்தியடையலாகாதென்றும் ஞானமின்றிச் செம்மை நலமின்றென்றும் அறிந்து சன்மார்க்கமான திருநெறியைச் சார்ந்தார். அக்காலத்தில் காகதாலியம்போல், சூலைநோய் கண்டிருக்கலாம். ஆயினும் தேகநோய் ஒன்றாலேயே, நம்பிய மதத்தைக் கைவிடுபவரல்லர். இல்லறமும் வெறுத்துச் சமணமும் அதனுடன் வெறுத்துச் சைவத்துறவியாய் வெளிவந்தனரென்பதே அவர் தேவாரப்பதிகங்களின் அகச்சான்றுகளுக்குப் பொருந்தும்.

இத்தலத்திய திருப்பதிகங்கள் அப்பர் வரலாற்றை ஆராய்வதற்கு நல்ல கருவிகளாய் விளங்குகின்றன. ஆயுள்முழுவதும் பிரமசாரியாய், வீணே மாதரைப் பழித்துச் சிலகாலமே சமணரிடமிருந்து, பின் ஒரு நோய்க்குப் பயந்து அம்மதத்தைக் கைவிட்டவர் அப்பரா, அல்லது உலக அநுபவம் நிறைந்து, பொன் நில மாத ராசை வெறுத்துப் பலகாலம் சமணத்திலிருந்து அந்நெறியால் முத்திபெறலாகாதென்று பிறவி

* வெவ்வ வண்ணத்து நாகம் வெருவவே
தவ்வ வண்ணக் கனல்விரித் தாடுவார்
செவ்வ வண்ணம் திகழ்திரு மீயச்சூர்
எவ்வ வண்ணம் பிரானிளம் கோயிலே.
திருமீயச்சூரிளங்கோயில்-திருக்குறுந்தொகை 5.

† பஞ்ச மந்திர மோதும் பரமனார்
அஞ்ச வானையு ரித்தன லாடுவார்
நெஞ்சம் வாழிநி னைத்திடு மீயச்சூர்
எந்த மையுடை யாரிளம் கோயிலே. ஷை 3

‡ 1. சாணிரு மடங்குநீண்ட சழக்குடைப் பதிக்குநாதர்
வாணிக ரைவர்தொண்ணூற் றறுவரு மயக்கம்செய்து
பேணிய பதியினின்று பெயரும்போ தறியமாட்டேன்
சேணுயர் மாடநீடு திருக்கொண்டீச் சரத்துளானே
திருக்கொண்டீச்சரம் திரு நேரிசை 7.

2. கூட்டமா யைவர்வந்து கொடுந்தொழில் குணத்தராகி
ஆட்டுவார்க் காற்றகில்லே னாடா வசைத்தகோவே
காட்டிடை யரங்கமாக வாடிய கடவுளேயோ
சேட்டிரும் பழனவேலித் திருக்கொண்டீச் சரவனாரே.
ஷை 4.

3. பொக்கமாய் நின்ற பொல்லாப்
புழுமிடை முடைகொளாக்கை
தொக்குநின் றைவர்தொண்ணூற்
றறுவரும் துயக்கமெய்த
மிக்குநின் றிவர்கள்செய்யும்
வேதனைக் கலந்துபோனேன்
செக்கரே திகழுமேனித்
திருக்கொண்டீச் சரத்துளானே
ஷை 5.

4. தொண்டனேன் பிறந்துவாளா
தொல்வினைக் குழியில்வீழ்ந்து
பிண்டமே சுமந்துநைந்து
போவதோர் வழியுங்காணேன்
அண்டனே அண்டவாணா
வறிவனே யஞ்சலென்னாய்
தெண்டிரைப் பழனஞ்சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்துளானே.
ஷை 2

$ பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்தநாளு மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்தநாளுங் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரத்துளானே
திருக்கொண்டீச்சரம்-திருநேரிசை 9.

* பாறினாய் பாவி நெஞ்சே பன்றிபோ லளற்றிற் பட்டுத்
தேறிநீ தெளிவை யாகில் சிவகதி திண்ண மாகும்.
அப்பர் — தனித்திருநேரிசை.

† சுற்ற மூந்துணை நன்மட வாளொடு
பெற்ற மக்களும் பேண லொழிந்தனர்
குற்றமில் புகழ் கொண்டீச் சரவனார்
பற்ற லாலொரு பற்றுமற் றில்லையே.
திருக்கொண்டீச்சரம்- திருக்குறுந்தொகை 2.

"மக்களே மணந்த தார மவ்வயிற்றவரை யோம்பும்
சிக்குளே யழுந்தி யீசன் திறம்படேன்" என்னும் அப்பர் பாசுரத்தையும் காண்க.

நோய் தீர்வதற்கே சைவரானவர் அப்பரா என்பதற்கு, இப்பதிகங்களைக் கொண்டே விடைபகரலாகும். இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் பத்து பாக்கள் அமைந்துள்ளன.

(33) திருமருகல்:—திருஞானசம்பந்தர் செங்காட்டங்குடியினின்று திரும்பியபோது தரிசித்த ஸ்தலம் இதுவாகும். இங்குச் "சடையாயெனுமால் சரணீயெனுமால்" என்னும் திருப்பதிகம் அகப்பொருளிலக்கணத்தில் சிலேடையாய்ப்பாடி விஷப்பாம்புகடித்து மாண்ட வணிகனுக்கு உயிர் தந்தனர்*. இவ்விடத்தில் அப்பர் பாடியதும் அகப்பொருள் துறைகளாயிருக்கின்றன †. இத்தகைய பத்து பாசுரங்களுள்ள ஒரு திருப்பதிகத்தைத் தேவாரத்திற் காண்கின்றோம். அப்பர் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்ற காலத்திலேயே இத் திருக்குறுந்தொகை பாடப்பட்டதென அநுமானிக்கலாகும்.

(34) திருப்பள்ளியின் முக்கூடல் :—இத் திருப்பதியின்கண் அப்பர் பாடிய திருத்தாண்டகப்பதிகம் ஒன்றே தேவாரத்தில் காணப்படுகின்றது. இதில் 10 பாக்கள் உள. இதன் முதற்பாசுரம் இத்தலத்திற்கு இப்போது வழங்கும் நாமம் (அரிக்கரியான் பள்ளி) வந்த காரணம் காட்டுவதுபோல் † விளங்குகின்றது. இப்பதிகம் சிவத்தன்மையைச் சமஷ்டியிலும் வியஷ்டியிலும் விளக்கும் ‡. இப்பதிகம் அப்பர் திருவாரூருக்குச் சென்றபின்னர் அதற்கு 2 மைலில் வடகிழக்கிலுள்ள இத்தலத்திற் பாடினரென நாம் அநுமானிக்கலாகும். 7-ம் பாசுரத்தில் இதற்குச் சற்று முன்னும் பின்னும் இவர் சென்ற திருப்பதிகளைக் குறிப்பிடுகின்றதை ஒருவாறு நாம் காண்கின்றோம் $.

* அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே!
சம்பந்தர் 3.

† இன்ன வாறென்ப தண்டறி யேனின்று
துன்னு கைவளை சோரக்கண் ணீர்மல்கும்
மன்னு தென்மரு கற்பெரு மான்திறம்
உன்னி யொண்கொடி யுள்ள முருகுமே.
—அப்பர்—திருமருகல்-திருக்குறுந்தொகை 5—

† ஆராத வின்னமுதை யம்மான் றன்னை
யயனொடுமா லறியாத வாதி யானைத்
தாராரு மலர்க்கொன்றைச் சடையான் றன்னைச்
சங்கரனைத் தன்னொப்பா ரில்லா தானை
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நீள்விசும்பா யாழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநா னுழன்ற வாறே.
திருப்பள்ளியின் முக்கூடல் - திருத்தாண்டகம் 1.

‡ ஊனவனை யுடலவனை யுயிரா னானை
யுலகேழு மானானை யும்பர் கோவை
வானவனை மதிசூடும் வளவி யானை
மலைமகண்முன் வராகத்தின் பின்பே சென்ற
கானவனைக் கயிலாய மலையு ளானைக்
கலந்துருகி நைவார்தந் நெஞ்சி னுள்ளே
பானவனைப் பள்ளியுன்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநா னுழன்ற வாறே.
ஷை 9.

$ நதியாருஞ் சடையானை நல்லூ ரானை
நன்னாற்றின் மேயானை நல்லத் தானை
மதுவாரும் பொழில்புடைசூழ் வாய் மூரானை
மறைக்காடு மேயானை யாக்கூ ரானை
நெதியானன் றோழனை நீடு ரானை
நெய்த்தான மேயானை யாரூ ரென்னும்
பதியானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநா னுழன்ற வாறே. ஷை 7.

மாறன் பாப்-பாவினம்.

(467 பக்கத் தொடர்ச்சி)

(467 பக்கத் தொடர்ச்சி)

கலிப்பாவினம்.

கலித்தாழிசை.

நெய்யமர் வேல நெடுமா லரங்கத்து [யான்.
ளையரிக் கண்ணியை யாரென வின்னு மறியேன்
செஞ்சுடர் வேல திருமா லரங்கத்து [யான்.
னஞ்சனக் கண்ணியை யாரென வின்னு மறியேன்
செம்புகர் வேல திருமா லரங்கத்து [யான்.
னம்பரக் கண்ணியை யாரென வின்னு மறியேன்

இவை மூன்று மிரண்டடியா யீற்றடி யிரண்டுசீர் மிக்கு வந்தமையாற் கலித்தாழிசை. பகுதி—சேட்படை. துறை—அறியான்போன்று வினவுகேட்டல். அலங்காரம்—அவயவவுவமை. 1

கலித்தாழிசை.

தாய்போன் றுலகளித்த
தஞ்சைமால் வெற்பனையாய்
சேய்போன் றொளியுடையன்
செங்கைத் தழைதரலுஞ்
சேய்போன் றொளியுடைய
கொண்டிலனென் சித்திரத்தால்
வாய்போன் றினிவரிலென்
சொல்லி மறுப்பன் வினையேனே.

இஃ தீற்றடி யொருசீர் மிக்கு ஏனையவைகண் மூன்று மொத்துத் தனியே யிடைமடக்காய் வந்த கலித்தாழிசை. இதுவும் பகுதி, யது. துறை—தலைவி குறிப்பறிதல். அலங்காரம்—அவயவவுவமை 2

கலித்தாழிசை.

மின்பெற்ற மேகமென மிளிரு மெய்த்திருமா
லன்பிற் றருதழையை யாயிழையா
ளன்பிற் றருகவென வாங்கி யதையணைத்த
பின்புற்ற வின்பப் பெருக்கென் புகல்வன்பெருமானே

இஃ திரண்டாமடி மூன்று சீராகக் குறைந்து, முதலடியு மூன்றாமடியு மளவடித்தாய்த் தம்மிலொத்து மீற்றடி யைஞ்சீராய்த் தம்மிலொத்து மொவ்வாதும் வந்த கலித்தாழிசை. பகுதி - இதுவுமது. துறை - தழைவிருப்புரைத்தல். அலங்கார-மிதுவுமது.

கலித்துறை.

வாளி பின்செல முன்செலு மறிபுன லொழுக்கத்
தாளி பின்செலு மின்செலு மடுகளி றங்கோ
கோளில் வான்பிடி குறுகலும் புணர்ச்சியுட் [கொளலால்
வேளின் மேதகு பெருவிற லயர்வரே விளைத்தார்.

இது, நெடிலடி நான்காய் வந்த கலித்துறை. துறை - நாடு வாழ்த்து. அலங்காரம் - தொழிலதிசயம். 4

கலித்துறை.

அடனி லாதர ணிழந்துளார் யாவரே யானு
மிடனி லாரிடைப் பணிபவ ராமெனல் மெய்யே
யுடனி லாதவாய் ஞானிமுன் பிரிகரி யுறுநீர்ப்
படரு மாகளிற் றெருத்ததாய்க் களித்தது பாய்ந்தே

இதுவுங் கலித்துறை. அலங்காரம் - நிதெரிசனம். 5

கலித்துறை.

இறைவ னுலலைந் திரியல்போ குனரிறை மையிலாச்
சிறைவ லாருழைச் சரண்புக வுடனிரி திறனென்
றறைவ தாம்புன லலைக்குமா ளிகைகடு திக்கையினத்
துறைவன் மாமுத றழீஇயு டனிரி தொடர்பே.

இதுவுங் கலித்துறை. திணையுந்துறையு மது. அலங்காரம் - வினையுவமை. 6.

கலித்துறை.

கலங்கு பாய்புனல் கடிந்தெழக்
கவட்டொடு மலங்கப்
புலங்கொ டாருவிற் புட்குலம்
போகலா திரைத்தல்
குலங்க டாங்குநர் நடுக்குறக்
குலத்துளா யவர்பா
னலங்கொள் வார்குழீஇக்
கலுழ்வதே போன்றன நவிலின்.

இதுவுங் கலித்துறை. திணையுந்துறையு மது. அலங்காரமு மது. 7

கலிவிருத்தம்.

அறைபொரு தமிழ்தரு மணியைத் தாருவை
நறைமரை வனக்கபி லையினை நாகினைத்
துறைதொறுஞ் சுழித்தெறி தொகுதிப் பாற்கட
னிறையமிழ் தயிர்த்த பல்வள நிகர்க்குமே.

இது கலிவிருத்தம். அலங்காரம் - தொழிலுவமையுன் ஒருவயிற்போலி. 8

கலிவிருத்தம்.

தரங்கவான் புனலிரு நரையுந் தாக்கலின்
மரங்கடா மசைந்தல......* வாழுமெம்
முரங்கெடா தளித்தியென் றள்ளிந் நொம்பராங்
கரங்களாற் பனிமலர் கவிழ்ப்ப போன்றவே.

இதுவுங் கலிவிருத்தம். அலங்காரம்—தற்குறிப்பேற்றவுவமை. 9

கலி விருத்தம்.

மண்ணக மடந்தைதன் வரம்பை வான்புனற்
பெண்ணர சழித்ததென் றுலகம் பேசுமா
றெண்ணிய யளவினுந் தேங்கு மார்த்திபா
யுண்ணிநீர்க் கடலைய முத்திங் கீய்ந்தவே.

பாவு மலங்காரமு மிதுவு மது. 10

கலிவிருத்தம்.

புக்கமா நிதிக்கெதிர் புனரி மாமணி
யொக்கவே தொழித்திட லுத்தி நாயகன்
மிக்கநா யகியென விரைந்து பாதகா
ணிக்கைபாய்த் திரைக்கரத் திடுவ போன்றவே.

பாவு மலங்காரமு மிதுவு மது. 11

கலிவிருத்தம்.

மடைதிறந் தொழுகுநீர் வாவி வாய்ப்புக
மிடைதிறந் தருமா லிந்த நாண்மலர்
புடைதிறந் ததுமலர்ப் பூவை பொனிதழ்க்
கடைதிறந் தெதிர்கொள நினையுங் காட்சித்தே.

இதுவும் பாவு மலங்காரமு மது. துறை—அஞ்சநாடு வாழ்த்து. 12

கலிப்பாவினமு முற்றிற்று.

* ஒரு சீர் குறைவு. "குகுத்தல்" என்ற சொல் பெய்து கொள்ளத் தக்கது.

பட்டினத்துப் பிள்ளையார்.

[473 வது பக்கத் தொடர்ச்சி]

V

ஓ, பேதாய்! உன் "ஞான" மெல்லாம் ஒருதலைச்சார்பானது. நீ இல்லையானால் உலகமில்லை என்பது உண்மையின் ஒருபுறமாகும்; அவ்வுண்மையின் மற்றொரு புறமாகிய, "உலகமில்லையானால், நீயுமில்லை" என்னும் விஷயத்தைக் கவனித்தாயில்லை.

473 பக்கத் தொடர்ச்சி.

மெய்யும் பொய்யும் ஒரே பலகையின் இருபுறங்களாவன, ஒரே கழியின் இருமுனைக ளாவன அல்ல. உண்மையில், அவ்விரண்டும் ஒன்றேயாம். உன் அற்ப சஞ்சலப்புத்தியால் ஒரு சமயத்தில் ஒன்றையும், மற்றொருசமயத்தில் மற்றொன்றையும் கண்டு பற்றிக் கூத்தாடுகின்றாய் போலும்!

[டொன்றை
ஊட்டுவிப் பானு முறங்குவிப் பானு மிங்கொன்றொ
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன் றவினை
காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப் பானு மொருவனுண்டே............ ..

உடுப்பானும் பாலன்ன முண்பானு
முய்வித் தொருவர்தம்மைக்
கெடுப்பானு மேதென்று கேள்வி
செய்வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந் தேகியென் றேற்பானு
மேற்கக் கொடாமனின்று
தடுப்பானு நீ யல்லையோ."

மதாசாரமாகிய போர்வை போர்த்துத், தத்வஞான அங்கியணிந்து, தர்க்கமென்ற பாதரக்ஷை தரித்துப், பாரம்பரிய நடத்தை என்ற ஈட்டி யேந்தி, பக்ஷவாதமாகிய குதிரை ஏறி, அதிவேகமாய்த் தாவி யோடுவதினின்றல்லவோ பொறுத்தற்கு முடியாத எதிர்பாராக் கஷ்டநிஷ்டூரங்கள் தலையெடுத்து உன்னை அல்லோல கல்லோலப் படுத்தி முறிக்கின்றன.

உடல் அழுக்கை நீக்குவாய், மனமாசைத் துடைப்பாய், பொறிகளை நிஷ்களங்கப் படுத்துவாய், அந்தக்கரணத்தைத் தூய்மை யாக்குவாய்! புனிதமாகிய ஆற்றில் குளித்து, வாய்மையாகிய ஊற்று நீரைப் பருகிச் சுகிர்தம் பெறுவாய்!

புத்தகப் படிப்பு மாத்திரம் பயனற்றது; உள்ளாராய்ச்சி மாத்திரம் ஞானம் ஊட்டுவதன்று; அறவுணர்ச்சியைக் கிளர்த்திப் பெருக்குவனவல்ல புத்தகப் படிப்புடன் அகம்புற வாராய்ச்சியும். இவ்வாராய்ச்சியுடன் கர்மமும் அநுபவமும், இவைகளுடன் பக்தி அல்லது நல்விசுவாசமும் வேண்டப்படுவன. இவைகளுக்கெல்லாம் மேலாகி இன்றியமையாதனவாய் நிற்பன நல்லோர் கூட்டுறவும், ஜகத் பிதாவின் கிருபையுமாம்.

விலங்கு வீரன், மண் பொன், ஜடத்வம் தெய்விகத்வம், என்பனவாதிகளுக்கிடையில், தத்தளிக்கும் பிராணி, மனிதன். இழிந்து தாழ்ந்த மிருகத்வ குணநடத்தைகளை வேருடன்களைந்து அப்புறப்படுத்தி, நசிப்பிக்க வேண்டும். இருதலைக்கொள்ளியின் மத்தியில் அகப்பட்டு அலப்புறும் எறும்பைப்போல், அவ்விரண்டுக்கு மிடையில் சிக்கி, அங்குமிங்கும் இழுக்கப்பட்டு அலமந்து வாடி மடிவதில் உயர்வு ஒன்றுமில்லை காண்!

அகத்தூய்மையை முகமலர்ச்சி பிரதிபலிக்கும்; அக விரிவினின்று சீரிய ஒழுக்கங்கள் வெளியாகும். ஆன்மப் பிரகாசமே உயரியது. உயரிய சிந்தனையினின்றே வாழ்க்கைச் சிறப்புத் தெளிவாகும், லக்ஷியம் கைகூடும் என்பதை மறவாதே!

தத்வஞானியின் விசாரிப்பும், அறிதுயிலரின் சமாதியும், கவியின் கற்பனா சக்தியும், வீரனது தீரமும் அந்தரான்மாவின் தொழில்களாவன. அவை தாம் பிரபஞ்ச சக்தியின் லீலைகளென்பதை அறிவாய்.

பொருளாசை பெண்ணாசை பூவாசை யென்னு
மருளாசை யாமாசை மாற்றித்-தெருண்ஞான
வேந்தராய் வாழலா மெய்யன்பர் நன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று.

தேக புஷ்டிக்குப் பின் மனோபலம், மனோ பலத்தினின்று அறிவு விசாலம், அறிவு விசாலத்தினின்று அன்புப் பெருக்கம், இதுவே ஆன்மசக்தி என்பதை உணர்!

பிறரைச் சீர்ப்படுத்துவதற்குமுன் தன்னை ஒருவன் ஒழுங்குபடுத்த வேண்டும்; ஆன்மமேன்மை யடைவதற்குமுன், ஒருவன் எல்லா "இழிவு"களையும் அறிந்திருக்க வேண்டும்; புனித மெய்துதற்குமுன், "அசஹ்யங்களை" ஒருவன் பார்த்திருக்க வேண்டும்; ஆன்மசக்தி பெருகுவதற்குமுன், நானாவித அச்சமதில் தோல்விகளின் தாரதம்மியங்களை உணர்ந்து அநுபவித்திருக்க வேண்டும்.

பிடிவாத அகங்காரமும் தன்னயமும் முரட்டு மமகாரமும் மூடநம்பிக்கையுமே, உண்மையை எழிலை இன்பத்தைச் சுருக்கிட்டு ஒடுக்கி யடக்குவன என்பதை மறவாதே.

வார்த்தைகளாலல்ல, செயல்களாற்றான் உயர்வது; போதனைகளாலல்ல, ஒழுக்கங்கள் மூலமாகவும் பலதிறப்பட்ட கருமங்கள் மூலமாகவுந்தான் திருந்துவது.

அகங்கார மமகாரங்களை வாய்மையாகிய பீடத்தில் பலியிடுவாய்.

வெவ்வேறான பொருள்கள் எவ்வுபாயங்களாலும் ஒன்றுபடா. ஒருவனுக்குச் சொந்தமில்லாதவைகளை அவனுடன் சேர்ப்பிக்க முடியாது. ஒருவனுக்கு ஆகாதவை அவனை யடையா.

தளைகளை யறுத்து, பேதங்களைக் கரைத்து, பிரிவு வித்தியாசம் முரண் என்ற எண்ணத்தை ஒழித்து, உலகாதிகளில் தன்னையும், தன்னை உலகாதிகளிலும் கண்டு, பிரபஞ்சம் தானாய்த் தான் பிரபஞ்சமாய், ஏகோபித்து நிற்றலே அறிதுயி லென்பது.

இடையூ றிடுக்கண்களைக் காதலர் புறக்கணித்து வென்று ஒன்றுதல்போல், ஜீவான்ம பரமான்மக் காதலர்கள் ஐக்கிய மடையவேண்டும்.

VI

அஞ்சக் காமெனுங் கோடாலி கொண்டிர்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேற வெட்டி வளங்கள்செய்த
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கிற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே.

கண்டேன் புகலிக் கருத்தனைத் தன்மெய்ஞ்ஞான
வண்டேனுண் டேமகிழும் வண்டானேன்-பண்டே
யளியனுமா னேன்மனமெய் யார்பதம் வேறின்றிக்
குளிர்சிவா னந்தமிலன் கும்.

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டு மிரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்ஞெல்லை நான் [மறைக்கு
மெட்டேனெ னும்பர மென்னிடத் தேவந்தி [செய்தியதே.

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனி லேவியப் பொன்று [கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற வுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாத பேரின்ப மௌனமே விழுங்கி யிருக்கின்றதே.

மெய்ஞ்ஞானி வீண் மனோராஜ்ஜியம் நிருமிப்பவனல்லன்; நுட்ப தர்க்கமுறையால் ஆதாரமும் உபயோகமுமற்ற சொற்கோட்டைகள் கட்டுபவனு மல்லன்; எக்கருமத்தையும் ஒழித்து, வெறுந் தியானத்திலேயே அழுந்தவேண்டு மெனக்கொண்டு போதிப்பவனுமல்லன்; சுகபோகங்களைத் துச்சமென இகழ்ந்து வெறுத்து ஒதுக்குபவனு மல்லன்; நாட்டைவிட்டுக் காடேக வேண்டுமெனக் கழறுபவனு மல்லன்; இல்லறத்தை அவமதித்துக் கடுந்துறவைக் கொள்ள வேண்டுமென உபதேசிப்பவனு மல்லன்; உலகாநுபவங்களைத் தூஷித்து, உள்ளாராய்ச்சியிலேயேதான் படிந்துகிடக்க வேண்டுமெனக் கூறுபவனு மல்லன்; சுயமதம் சுயசிந்தனை கொள்கைகளே, மிக்க மேலானவையெனச் செருக்குற்று பலாத்காரமாகப் பிறரையும் அவைகளை ஏற்று ஒழுகச் செய்பவனுமல்லன்; சத்தியம் சிவம் சுந்தரம் என்பவற்றுடன் ஈடுபடுதற்கான மார்க்கம் ஒன்றேயெனச் சாதிப்பவனுமல்லன்; காலம் இடம், மாந்தர்படும் இன்னலிடர்களை, அல்லது, வாழ்க்கைக் கியல்பான துன்பங்களை நிராகரிப்பவனு மல்லன்; உலகவாழ்க்கையை ஓர் மிக்க சிருங்கார நடிப்பென்றுவது, அல்லது, துக்ககாப்போக்கு, அல்லது எண்ணற்கரிய துயரங்களின் விளைநில மென்றுவது, கருத்துஅற்ற வோர் பயனிலாக் குருட்டு ஓட்டமென்றுவது புகட்டுபவனுமல்லன். சுருங்கச் சொல்லின், பால பருவத்தில் மதித்துப் பற்றிக் குதூகலித்த உடைமைகளை எவ்வாறு வயது செல்லச்செல்லப் புத்திபெருகி அநுபவம் முதிர்வதால் விடுத்து அவைகளுக்கும் மேலானவைகளைக் கைம்மேற்கொண்டு இன்புற்றிருந்து வருகிறோமோ, அவ்வாறே, பூர்ண அநுபோகமும், முதிர்ந்த ஞானமும், தீர்க்க ஆராய்ச்சியும், அதிவிசாலதாராள நோக்கமும் பெருகப்பெற்ற பெரியோர், புல்லறிவாளர் விநாடிதோறும் கைப்பற்றிவரும் அழிபொருள்களில், மாறும் விஷயாதிகளில், அற்பசுகங்களில், தலையிட்டு உழலாது, சர்வத்திற்கும் மேலானவைகளில் தம் மனத்தைச் செலுத்தி, முடிவில், சாந்தியும் இன்பமும் பெற்று ஆனந்தித்து வருகின்றனர்.

மாத்தான வத்தையு மாயா புரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு கிட்டையுண் டோகித்தனன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர் பற்றற்றவரே.

உடைகோ வணமுண் டுறங்கப் புறத்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்
பிறைக்கே.

நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுவதும்
இச்சையிலே தானங் கிருப்பதுவும்-பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துநிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

இக்கொள்கையரைச் சோம்பேறிகளெனவும் உன்மத்தரெனவும் சில மேதாவிகள் பரிகசிக்கலாம். உண்மையில், இத்தகையரின் ஹிதோபதேசங்களும் வாணாளின் போக்குமே ஜீவனின் மெய்யிலக்ஷியத்தைப் புகட்டி வலியுறுத்துவன. சிரச்சேதம் சிறைச்சாலை ஈட்டி வாள் பீரங்கி கடுங்காவல் கொடியதண்டனை முதலானவைகள் அவர்களை அச்சுறுத்தா, பாதிக்கா. ஜனசமூகத்தின் ஆணிவேராய், நாகரிகத்தின் அடிகோலாய் விளங்குபவர். கொடுங்கோ லரசின் சத்ரு இத்தகையரே; சுய சுகபோகிகளின் அச்சத்திற்கும் அழிவுக்கும் காரணர்கள் இவர்களே; இவர்களே மௌட்டியர்க்கும் துச்சர்களுக்கும் தார்க்கோ லாவர். உடலை ஆபாசக் கொட்டிலெனவும், வாணாளைச் சஞ்சலச் சாகரமெனவும், இறப்புப் பொய்யெனவும், மனமார நம்பி உணர்ந்து அறிந்தவர் எவரைப் பொருட்படுத்துவர்? ஏன், எதற்கு அஞ்சுவரோ? யக்ஞவாக்கியர், வசிஷ்டர், பீஷ்மர், புத்தர், சோக்ரதன், ஏசு கிறிஸ்து, சங்கரர், பவுல், பெனெதிக்த், பிரான்ஸிஸ்டி அஸைஸி என்பவர் போன்ற சந்நியாசிகள், ஜோனுபார்க், ஸ்ரீராமதாஸ், மாஜினி, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், இன்னமும்இவர்கள் வகுப்பைச் சேர்ந்த ஏனையோரெல்லாரும்சாமன்யரோ? "ஓடாமற் பாழுக்குழையாம லோர முரைப்பவர்பாற் கூடாம னல்லவர் கூட்டம்விடாமல், வெங்கோப நெஞ்சினுடாமனன்மை வழுவாம லின்றைக்கு நாளைக்கென்று தேடா" தவரும். "செல்வரைப் பின்சென்றுச் சங்கடம் பேசித் தினந் தினமும் பல்லினைக் காட்டிப் பரிதவியா" தவரும் எதைச்செய்ய வல்லவரல்லர்? எவரைப் பொருட்படுத்துவர்? நாகரிகங்கள் ஓங்குவதும் தாழ்வதும், ராஜாங்கங்கள் பெருகுவதும் சிறுகுவதும், நன்மை தீமைகள் மல்குவதும் அஃகுவதும், ஞானிகள் தியாகிகள் முனிவரர் என்றவர்கள் அவதரித்திருப்பதையும் அன்னவர் செய்கைகளையும் சார்ந்துள. தங்கள் கரத்தில் இவர் இருப்பாயுதங்கள் தாங்கவேண்டியதில்லை, சதுரங்க சேனைகள் திரட்டிச் செல்லவேண்டுவ தில்லை, தியாக சிந்தனை மேலடையவே, அகக்கண்ணைத்திறந்த மாத்திரத்தில், அன்புமிக்க இதயத்தை விரித்தவுடன் கொடுமை பறக்கும், சிறுமை மறையும், துன்பம் சிதைந்துபோம், ஏக்கம் குறுகும். பொருட்செல்வமல்ல, பேர்புகழ் கேண்மை யல்ல, தோள்வலிமையல்ல படைத்தொகுதி யல்ல, ஆனால், புலக்கட்டு—மனோவன்மை கனிந்த உள்ளம், ஞான வளப்பம், ஆன்ம ஒளியே ஒருவனுக்கு உற்ற துணையாவன, மெய்யாதாரமும் பக்கபலமும் துணைக் கருவியுமாவன.

[களத்துந்
பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்
தெருளுடையோரை முகத்ினுந் தேர்ந்து தெளிவதுபோ
லருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத்தகும்.

பட்டினத்தடிகளி னிடமிருந்து ததும்பிப் பெருகியோடி யாவராலும் அறிந்து அநுட்டிக்கவேண்டிய நெறியும், நிரந்தர நித்ய வுண்மைகளும், எக்காலத்தினரும் எம்மதத்தினரும் எத் தத்வக்ஞரும் போற்றக்கூடிய விஷயங்களும் யாவை?

[மெல்லா
ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வ
மன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுபதேசமிதே.

நேமங்க ணிட்டைகள் வேதங்க ளாகம நீதிநெறி
யோமங்க டர்ப்பணஞ் சந்தி செபமந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்க டோறு மிவர்செய்யும் பூஜைகள் சர்ப்பனையே.

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
யோடே யெடுத்தென்ன வுள்ளன் பிலாதவ ரோங்குவிண [ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லத்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென் சொல்லுவேன்.

அன்றென்று மாமென்று மாறு சமயங்க
ளொன்றொன் றொவ்வா துரைத்தாலு - மென்று
மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு
மருதனையே நோக்கி வரும்.

சொல்லிலுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலு
மல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோ
ரில்லிலு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடங்
கல்லிலுஞ் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே

தேகத் தடிப்பும் மனோ வுல்லாசமுமே மிக்க சால்பெனக் கொண்டிருப்பவர் புலன்களால் இழுக்கப்பட்டுத் தெருநாய்போல் அலைந்து, வருந்திச் சுயபலத்தை இழந்து, கெட்டுயிர்த்துமாய்வர். மெய்யாக, இச்சீரியர் வற்புறுத்துவன, புலன்களைத்திருத்தி உயரவேண்டும், அகம் புற ஆராய்ச்சியிற் புகவேண்டும், சுய சக்தியை உணரவேண்டும் என்பனவே யல்லாது, புலன்களை யடக்கி நசிப்பிக்கவேண்டும், சுயத்வத்தைத் துறந்து, பிறர் குணவொழுக்கங்களையும் சொல் செயல்களையும் கொள்கைகளையும் போக்கையும் கண்மூடித் தனமாக நம்பிப் பின்பற்றியொழுகி மழுங்கி யழியவேண்டுமென்பன வல்ல. சுகபோகங்களாலும் ஆசாபாசங்களாலும் தற்புகழ்ச்சி மடி சுயநலம்பாராட்டல் முதலாயினவைகளால் கவரப்பட்டு நடிப்பவர், நாளாவிர்த்தியில், நடைபிணங்களாவர் என்ற பேருண்மை, அநுபவ உலகில் வாதிக்கக் கூடாவண்ணம், நிரூபிக்கப்பட்டுவருவதைப் பாராதவர் கேளாதவர் அறியாதவர் இலர். இவ்விஷயங்களை அங்கீகரிப்போமாயின், இப்பெரியார்களின் ஆப்தமொழிகளை அலக்ஷியஞ்செய்து விடுத்து மறத்தல் முறையாமோ?

முற்றிற்றி.

தமிழ்ப் பாடம் 77.

[நளவெண்பா.]

[471 பக்கத் தொடர்ச்சி]

கலி நீங்கு காண்டம்

முன் தன்னை வஞ்சனையால் வென்றவப் புஷ்கரனை நளன் இப்பொழுது மறுசூதில் வென்று வளநாடும் அரசும்பெற்று மாவிந்த நகரிற்குள்ளெய்தியதும், இவ்வாறு மீண்டுவரும் தம் அரசனைக்காண நிடதத்தார் சந்தோஷம் அடைந்ததும் சொல்வதோடு,இந்நளவெண்பா என்னும் நூல் ஆசிகூறி முடிவடைகின்றது.

ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். 92.

பதவுரை

ஏனை - மற்ற,
முடி - கிரீடங்களைத் தரித்த
வேந்தர் - அரசர்
எ - எல்லா
திசையும் - பக்கங்களிலும்
போற்று - துதியை
இசைப்ப - சொல்லவும்,
சேனை - சைனியங்கள்
புடை - பக்கத்தில்
சூழ - சூழவும்,
தேர் - தேரில்
ஏறி - ஏறி
ஆன - பொருந்திய
புகழ் - புகழையுடைய
பொன் - பொன்னால் ஆகிய
நகர் - அமராவதி நகரத்தை
எய்தும் - அடையும்
புரந்தரனைப்போல் - இந்திரனைப்போல
பொலிந்து - விளங்கி
நளன் - நளவேந்தன்
நல் - நல்ல
நகரம் - மாவிந்த நகரத்தில்
புக்கான் - சென்று சேர்ந்தான்.

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதொடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர். 93.

பதவுரை

பார் - தனது இராச்சியத்தை
பெற்று - அடைந்து
மாதொடு - தமயந்தியோடு
வர - வருவதை
கண்ட - பார்த்த
மா - பெருமை தங்கிய
நகருக்கு - நகர ஜனங்களுக்கு,
கார் - மேகம்
பெற்ற - வரக்கண்ட
தோகையோ - மயிலையோ,
கண் - இழந்திருந்த கண்களை
பெற்ற - மீண்டும் அடைந்த
வாள் - ஒளிபொருந்திய
முகமோ - முகத்தையோ,
நீர் - நீரை
பெற்று - பெற்று
உயர்ந்த - நிமிர்ந்த
நிறை - நிறைவுடைய
புலமோ - வயலிலுள்ள பயிரையோ,
ஏதோ - மற்று எதனைத்தான்
எதிர் - நிகராக
உரைப்பேன் - சொல்லுவேன்.

விரிவுரை:—தேர்மேல் தன் மனைவியோடு மீண்டும் தம் அரசனாவதற்கு வந்த நளனைக் கண்டவுடன் அந்நகரமாக்கள் கொண்ட கிளர்ச்சிக்கு 'உவமை எதனைக் கூறுவேன்' என்ற தெரியாமல் திகைப்பது யாரோ வெனும் சந்தேகத்திற்கு இங்குச் சிறிதிடமிருக்கின்றது. இந்நூலின் முதலிலுள்ள பதினொன்று செய்யுள்களைப் பாடத்திற் கெடுத்துக்கொள்ளமல் விட்டுவிட்டோம். அச்செய்யுள்களில் இந்நளனது கதைக்குத் தோற்றுவாய் இருக்கின்றது. சூதினால் யாவும் இழந்து வனத்திலிருந்த தருமராசனை வேதவியாஸ முனிவர் வந்து கண்டனர். அவரிடத்தில் தருமன் தன் குறைகளைக் கூறினான் என்பதை அச்செய்யுள்கள் குறிக்கின்றன. அவைகளை இப்பொழுது பார்ப்போம்.

பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக்—காரணந்தான்
யாதோவப் பாவென்றா னென்றந்தன் வெண்குடைக்
கீழ்த் தீதோவப் பார்காத்த சேய்.

பொழிப்புரை:—தன் வெண்மையாகிய குடையின் கீழ், தீமை தங்காது ஒழியும்படி பூமியைக் காத்த தருமபுத்திரன், "என் தந்தையே, எங்கள் பெரிய இராச்சியத்தையும் செல்வத்தையும் கைவிட்டு, செல்வதற்கு அருமையான இந்தக் கொடிய கானகத்தைச் சேர்வதற்கு என்ன காரணமோ" என்றான்.

இதனைக்கேட்ட வியாஸமுனிவர், அவனைத்தேற்றுவாராய், 'சூதாடித் துன்பமடைந்தவன் நீ ஒருவனே அல்லன்; மன்னர்களுக்கு இது இயல்பாய் இருப்பதுபோல் தோன்றுகின்றது. ஒருவருஞ் செய்திராத ஒரு தீமையை நீயே செய்தாய் என்று எண்ணி மிக வருந்தாதே' என்று கூறினார் என்பதைக் கவி பின் செய்யுளில் குறிக்கின்றார்.

கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்—வாடிக்
கலங்கலைநீ யென்றுரைத்தான் காமருவு நாடற்
கிலங்கலைநூன் மார்ப னெடுத்து.

பொழிப்புரை:—"கெடுதல் இல்லாத சிறந்த செல்வமும் கெடும்படி செய்கின்ற சூதாட்டத்தை ஆடுவது, இதழ்விரிந்த மலர்மாலையை அணிந்த அரசர்களுக்கு இயல்பாக இருக்கின்றது. ஆகையால் நீ மனம் வாடிக் கலங்காதே" என்று சோலைகள்சூழ்ந்த குருநாட்டரசனாகிய தருமனுக்குப், பிரகாசத்துடன் புரள்கின்ற பூணூலணிந்த மார்பையுடைய வியாஸமுனிவர் எடுத்துரைத்தார்.

இவ்வாறு முனிவர் கூறிடத் தருமன் தானன்றி வேறும் சில அரசர் சூதினால் அழிந்ததுண்டோ வென ஆச்சரியமடைந்து வினவியதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

கண்ணிழந்து மாயக் கவறாடிக் காவலர்தா
மண்ணிழந்து போந்தவனை நண்ணி—விண்ணிழந்த
மின்போலு நூன்மார்பா மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தா ரிடர்.

பொழிப்புரை:—"மேகத்திலிருந்து இறங்கிய மின்னலைப்போன்ற பூணூலை அணிந்த மார்பை உடையவனே, குருடர்களைப்போல் அதன் தீமையைப் பாராமல் வஞ்சனையாகிய சூதாடி நாட்டை யிழந்து காட்டை அடைந்து என்னைப்போலவே வருத்தமெய்திய அரசர்கள் என்னைத்தவிர வேறு இருக்கின்றனரோ?" என்றான் தருமன்.

இவ்வாறு கேட்ட தருமனுக்கு வேதவியாஸர் நளனுடைய கதையை எடுத்துக் கூறினார் என்பதைக் கவி அடுத்த செய்யுளில் செப்புகின்றார்:—

சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்
கோமவேற் காளை நளனென்பான்—யாமத்
தோலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் விளைந்த கதை.

பொழிப்புரை:—காவலைச் செய்கின்ற வேலையுடைய தருமராஜனுக்கு, ஒப்பற்ற செங்கோலையும், அச்சத்தைத் தருகின்ற வேலையும் உடைய நளன் என்று சொல்லப்படுபவன், இரவில் மிகுதியும் ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட நாட்டினை முன் முழுவதும் இழக்கும்படி கலியினால் நேர்ந்த கதையை (வியாஸர்) சொன்னார்.

இனி இதன்மேல், 'காமர் கயல்புரள' என்று நிடத நாட்டின் சிறப்பைச் சொல்கின்றசெய்யுளோடு அந்தக் கதைம் ஆரம்பமாகின்றது. இப்படிச் செய்யுள்கள் தொடர்கின்றஅமைப்பைப் பார்க்கும்பொழுது, மேல் கூறப்படுகின்ற இக்கதை வேதவியாஸருடைய வாக்காகவே நிகழ்வதுபோல் தோன்றுகின்றது. நளனுடைய கதையை அம்முனிவர் தருமனுக்கு என்னவாறு உரைத்தாரோ அப்படியே புகழேந்தி, முனிவருடைய மொழிகளாகவே கருதி அமைத்திருப்பாரானால், 'காமர் கயல்புரளக் காவி முகைநெகிழ'' என்ற தொடக்கத்தையுடைய அந்தச் சுயம்வர காண்டச் செய்யுள்முதல், ''ஏதோ வுரைப்பன் எதிர்'' என்று முடிகின்ற இந்தக் கலிநீங்கு காண்டத்தின் 93 வது செய்யுள் ஈறாக இடையில் வந்த 402 செய்யுள்களும் கவிக்கூற்றாக இருத்தல் இயலாது. அவையாவும் வேதவியாஸரின் மொழிகளாகும். அவ்வாறு ஆகுமானால், "ஏதோ உரைப்பன் எதிர்'' என இங்கு வியந்தவர் புகழேந்திப் புலவர் அல்லர்; வியாஸமுனிவரே ஆதல் வேண்டும். அடுத்த செய்யுளும்இக்கருத்திற்கு ஆதாரமாயிருப்பதுபோல் தோன்றினாலும், அதனிலும் சந்தேகம் உண்டு.

வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதையீ
தென்றுரைத்து வேத வியன்முனிவன்-நன்றிபுனை
மன்னு பருவரலை மாற்றுதியென் றாசிமொழி
பன்னு நடந்திட்டான் பண்டு. 94.

பொழிப்புரை:—வேதங்களின் தன்மையையுணர்ந்த முனிவர், 'வெற்றி பொருந்திய நிடததேசத்தவர்க்கு அரசனாகிய நளனுடைய சரித்திரம் இது ஆகும்' என்று தருமபுத்திரனுக்கு உரைத்து, "நற்குணங்கள் வாய்ந்த அரசனே, உன் மனவருத்தத்தை நீக்கிவிடு" என்று அவனுக்கு ஆசிகள் சொல்லிவிட்டு அகன்றனர்.

விரிவுரை:—''வென்றிநிடதத்தார் வேந்தன் சரிதை ஈது'' என்ற சொற்கள் இங்கு முனிவர்தம் மொழிகளாயிருக்கலாம்; அல்லது கவியின் மொழிகளாகவும் இருக்கலாம். இவை முனிவர் வார்த்தைகளாயிருக்குமாயின் இதுவரையில் சொன்ன கதையும் அவர் வாயைக்கொண்டே நேராகக் கவி சொல்லவைத்ததென்று நினைக்க இடமுண்டு. அல்லது, "ஈது'' என்பதற்கு 'இப்படிப் பட்டது' என்று அர்த்தம் செய்தால், முன் சொன்ன கதை யெல்லாம் கவி தன்னுலேயே தன்னுரையைக் கொண்டே சொன்னது போலாகும். நூலின் இடையிடையே சந்திரன்சுவர்க்கியைப் புகழ்தல், புலவரே கதையை நேராகச்சொல்லும் முறைக்குப் பொருந்துமேயன்றி வியாஸர் வாக்கில் அது பொருத்தமுடைய தாகாது. மேலும், கலிநீங்குகாண்டம் 49-வது செய்யுளில் "மள்ளுவநாட்டு எம் கோமான் சந்திரன்சுவர்க்கி'' என வந்திருப்பதை நோக்கும்போது, 'எம் கோமான்' என்றது கவிக்கூற்றிற்கே ஏற்றதாகும்.

வாழி யருமறைகள் வாழிநல் லந்தணர்கள்
வாழிநளன் காதை வழுத்துவோர்—வாழிய
மள்ளுவநாட் டாங்கண் வருசந்திரன் சுவர்க்கி
தெள்ளுறுமெய்க் கீர்த்தி சிறந்து. 95.

பொழிப்புரை:—அருமையான வேதங்கள் வாழட்டும் நல்ல அந்தணர்கள் வாழட்டும். நளனுடையகதையைப் புகழ்ந்துகூறுவோரும் கேட்போரும் வாழட்டும். மள்ளுவநாட்டில் உதித்திருக்கின்ற சந்திரன்சுவர்க்கியினது தூய்மையான மெய்க்கீர்த்தி நாளுக்குநாள் சிறந்து வாழட்டும்.

விரிவுரை:—இவ்விதம் மங்களம் பாடி நளனுடைய சரித்திரத்தைப் புகழேந்திப்புலவர் நிறைவேற்றுகின்றனர். முன் நளன் நமக்காகக் கலிபுருடனிடம் கேட்டுக்கொண்ட வரத்தின்படி இக்கதையை விரும்பிப் படித்தவரை இக்காலத்திலும் துன்ப மடையாதென்றுரைப்பதற் கையமில்லை. இலக்கியச் சுவையையூட்டி வளர்க்குந் திறத்தில் இந் நளவெண்பா மிகவுஞ் சிறந்ததாம். இலக்கியச்சுவை முதிரமுதிர அம்முதிர்ச்சிக் கேற்றஅளவு இடர்களும் அகன்றுகொண்டே போவதாகும். கற்க ஆரம்பம் செய்யுங்காலத்திலும் எளிதும் இனிதுமாயிருக்கும் நூல் இது, பல பிற கற்றபின் ஓதினாலும் அருமையும் பெருமையும் அதிகம் காண்பதற் கொத்தது.

நளவெண்பா முற்றிற்று.

இலக்கணம்.

வேற்றுமை, வினை, பண்பு உவமை உம்மை எனும் ஐவகைத் தொகைநிலைத்தொடர்களுக்குப் புறத்தேயும் வேறுசில சொற்கள் மறைந்திருந்து அன்மொழித் தொகைகள் ஆவதைக் கற்றீர். இவ்வாறு ஆகின்ற அன்மொழித்தொகைகள், அத்தொடரில் வந்துள்ள சொற்கள் இயற்கையாய்க் கொண்டுள்ள பொருளைப் பெற்றிராமல் வேறொரு பொருளைக் குறிக்கின்றன. பொற்றொடி பேசினாள்; தாழ்குழல் பேசினாள்; மேல் இயல் மொழிந்தாள்; தேன்மொழி கூறினாள்; உயிர் மெய் இருநூற்றுப்பதினாறு; என்னும் உதாரணங்களிலுள்ள பொற்றொடி முதலிய ஐவகைத் தொகைகளுக்குப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைகள் தமக்கு இயற்கையாயுள்ள பொருள்களைக் காட்டாது வேறு பொருளைக் காட்டிநிற்கின்றன. பொன் தொடி, என்பதற்கு இயற்கையாயுள்ள அர்த்தம் பொன்னால் செய்த வளை என்பது. ஆனால், 'பொன் தொடி பேசினாள்' என்னும்போது பேசிய காரியத்தைச் செய்தவை வளையல்கள் என்று எவரும் எண்ணார். ஆதலால் அது இங்கு ஒருபெண்ணைக் குறிக்கின்றது. மற்ற உதாரணங்களாலும் இப்படியே அன்மொழித் தொகைகள், சொற்களின் இயற்கையாய பொருள்களிலிருந்து மாறி வேறுபொருளைத் தந்து நிற்பதை அறியலாம்.

ஆகுபெயர்களும் இப்படியே சொற்களின் இயற்கைப்பொருள் மாறி வேறுபொருள்கள் தருவன என்பதைக் கற்றிருக்கின்றீர். "கோபத்தால் அவள் கயல்கள் சிவந்தன,'' என்னும் உதாரணத்தில் கயல்கள் என்னும் சொல் மீனைக் குறிக்காமல் கண்ணைக் குறிக்கும் உவமை யாகுபெயர். காரிகை, என்ற சொல்லிற்கு 'அழகு' என்பது அர்த்தம். அது பண்பாகு பெயராய்ப் 'பெண்' என்ற வேறு பொருளைத் தருவதைக் கண்டிருப்பீர். 'கயவர்களை உலகம் இகழும்', என்னும்போது உலகம் என்பது அதன் இயற்கையாய அர்த்தத்தின்படி பூமியைக் காட்டாமல் ஜனங்களைக் குறிப்பதால் இடவாகு பெயராகின்றது.

இவ்விதம் அன்மொழித்தொகை, ஆகுபெயர் என்னும் இவ்விரண்டும் தமக்கு இயற்கையாயுள்ள பொருள்களுக்குப் பதிலாய் வேறுபொருள்களைக் குறிப்பனவானாலும் அவைகளுக்குள் வித்தியாசம் இருக்கின்றது:— காரிகை வந்தாள்; இராமன் தன் மயிலோடு வனம் சென்றான்; மீண்ட நளனைக்கண்டு மாவிந்தம் மகிழ்ந்தது; என்னும் உதாரணங்களில் காரிகை, மயில், மாவிந்தம் என்ற சொற்களைப்போல் ஆகுபெயர்கள் வேறு ஒரு சொல்லின் தொடர்பில்லாமல் தாமாகவே சந்தர்ப்பத்திற்கேற்ற வேறு பொருளை எய்தி நிற்கும். அன்மொழித்தொகையோ அவ்வாறன்று. இரண்டு சொற்கள் ஒன்றாய்த் தொடர அத்தொடரின் உதவியினால் பொருள் வேறுபடக்கூடியது அன்மொழித்தொகை அத்தொடரும் யாதாவதொரு தொகைநிலைத்தொடரா யிருக்கவும்வேண்டும். 'பிறை நுதல் பேசினாள்' என்னும்போது, பிறை நுதல் என்னும் அவ்விரு சொற்களும் உவமத்தொகையாகி ஒன்றாய்த் தொடர்ந்து வருவதாற்றான் 'பெண்' என்ற பொருள் பெறக்கூடும். பிறை பேசினாள் என்றாலும் நுதல் பேசினாள் என்றாலும் பெண்பேசினாள் என்ற பொருள் கிடைக்காது; பிறைநுதல் என்று ஒன்றாய்ச் சேர்ந்தால் 'பெண்' என்ற பொருள் வரும்.

189060

ஆகுபெயர்கள் தொன்றுதொட்டு இதற்கு இது என்று ஆன்றோர்கள் ஆக்கப்பெற்று வழங்கி வருவன. இப்பொழுது நமது மனம்போனபடி புதிது புதிதாக ஆகுபெயர்கள் ஆக்கிக்கொள்ளல் கூடாது. அழகு என்னும் அர்த்தம் உடைய காரிகை என்னும் சொல்லை அக்காரிகை என்னும் குணத்தையுடைய பெண்ணிற்கு ஆக்கி வழங்குவர். ஆனால், அழகு வந்தாள், என்று நாம் இப்பொழுது பெண்ணைக்குறிக்க அழகு என்னும் சொல்லையே வழங்கஇயலாது எனவே ஆகு பெயர்களுக்கு ஒரு நியதி உண்டு. அன்மொழித் தொகைகளும், மனம்போனபடி அமைத்துக்கொள்ளத்தக்கன வல்லவாயினும் தொன்றுதொட்டு வந்தனவா யிருக்கவேண்டுமெனும் நியதி ஆகுபெயர்களினளவு அன்மொழித்தொகைகளுக் கில்லை. புலவர் தம்முடைய நல்லுணர்வின் தன்மைக்குத் தக்கபடி அவ்வப்போது அன்மொழித் தொகைகளை அமைத்துக் கொள்வது இழுக்காகாது. புரிவளை, வரிவளை, செறிவளை, ஆய்வளை என்பனபோல் 'பெண்' என்ற வேறு பொருளைக்குறிக்க அன்மொழித்தொகைகள் பலவாறு அமையக் காண்கின்றோம். எனினும், வரிகளமைந்த வளையல்கள் அணிந்த பெண்ணை வரிவளை என்றழைப்பதால், பொன்னாலாகிய சிலம்பை அணிந்த ஒருத்தியைக் குறித்து 'என்றாள் ஒரு பொற்சிலம்பு'' என்று கவிகள் கூறக் கண்டிலோம். "அணியிழை'' என்பது பெண்ணைக் குறிக்கும் ஒரு அன்மொழித்தொகை. இதை ஒட்டிப் 'பட்டாடை' என்பது அன்மொழித் தொகையாய்ப் பெண்என்னும் வேறு பொருளில் வரப் பார்த்ததில்லை.

இதனோடு சொற்றொடரிலக்கணம் முடிகின்றது.

குலசேகரர்.

[475-வது பக்கத் தொடர்ச்சி]

நடமாடுங் கோவில்

2\. தோடு லாமலர் மங்கை தோளிணை
தோய்ந்த துஞ்சுடர் வாளியால்
நீடு மாமரம் செற்ற தும்நிரை
மேய்த்ததும் இவையே நினைந்து
ஆடிப் பாடியரங்க வோவென்
றழைக்கும் தொண்ட ரடிப்பொடி
ஆட நாம்பெறில் கங்கை நீர்குடைந்
தாடும் வேட்கை என்னுவதே.

[தோடு - இதழ்; வாளி - அம்பு; மரம் - மாமரம்; செற்றதும் - அழித்ததும்; நிரை - ஆனிரை - பசுமந்தை]

தோடலோ மலர்மங்கை தோளிணை தோய்ந்ததும்—

அடியவர் பெருமையே பெருமை. அன்பே அவர்கள் வடிவம். அன்பே அவர்கள் அறிவு. அன்பே அவர்கள் வாய்மொழி. அவர்களது உள்ளத்தறிவு எதனை அறிகின்றது, எதனை நினைக்கின்றது? ஆண்டவன் அன்பு நிலையைத்தான் அறிகின்றது. அன்புவழி சென்று அன்பு கண்ணைக்கண்டு அன்பு பிடியாகப் பிடித்தாலன்றி அகப்படுவானோ அம்மாயக் கள்வன். அன்றியும் அன்பேயல்லாது அவனிடத்து அடியவர் வேண்டுவது யாது? அன்பே அவனது பெருமைக்கிருப்பிடம். அதனை நினைந்துருகுகின்றனர் அடியவர்கள். அவ்வன்புக் கடிப்படையான அருள்நிலையை முதலில் நினைக்கின்றனர். தண்ணருளாந் தனிப்பெருந் தாயொடுகூடி நின்ற அருள்நிலையை அன்போடும் ஆர்வத்தோடும் நினைந்து மகிழ்கின்றனர். அவ்வருட்பெருந் தாய், தோன்றும்போதே, இன்பமாம் மலரில் இனிதே எழுந்து தோன்றினள். இதழ்கள் மிக்க பெருமலர் ஆதலின் அதிலூறும் தேன் உவட்டெடுத் தோடமணமும் பெருமணமாய் மிகுந்தபோது, பூவெனப்படுவது பொறிவாழ் பூவெனச் சிறப்பிக்கப்படும். அப்பூவானது கண்கவர் வனப்பொடும் காட்சிதந்து மற்றைய புலன்களுக்கும் வளப்பமாம் இன்பந் தருவதை என் என்பது? அம்மலரோ இன்பவடிவினது. மலரினும் மெல்லிய ஊற்றின்பமும், தேனினுமினிய சுவை இன்பமும், பல்லாயிர மிதழ்கள் பரந்து விளங்கும் மலரினுமினிய காட்சி இன்பமும், திருமலர்நின்றெழும் திருமணத்தினும் இனிய முகர்ச்சிஇன்பமும், பலநிற வண்டுகளும் பன்மலர் சென்று திரிந்து வாடாமே, இன்பமாய் அமர்ந்து இனிய தேனுண்டு பாடும் செவ்வழி முதலாம் திருந்திய பண்ணினும் தித்திக்கும் கேள்வியின்பமும், அருள் வடிவாம் அம்மையிடத்தும் அறிவு வடிவாம் ஆண்டவன் இடத்துமன்றி வேறெங்கே உள்ளன. அன்பு அமைந்த இடத்தில் இன்பமும் இனிதமரு மாதலின் அருட்பெருந் தாய் தோன்றியபோதே இப்பேரின்ப மலரோடே தோன்றினள். இன்ப மலரை இமைப்பளவும் பிரிந்தறியாள் அவள் வடிவமோ மணமிரக்கமாகிய பெண் வடிவு, மலரோ இன்ப உருவம். அது நிற்பது இன்ப உலகில்தான். அமைதியும் இன்பமும் இன்பக்கலவியில் இணைந்திருக்கும் அழகின் பெருக்கமாம் தண்ணீர்ப் பரப்பில் தென்றல் திருக்கூத்தாடி மெல்ல உலவ, அன்றலர்ந்த மலரேபோல என்றும் தோன்றி அறிவுவிளக்கெனப் பொலியும் அழகிய மலரின் இதழ்கள் இனிய காற்றிலே மெல்ல அசைதலானது, இன்பக்காற்று வாங்கவும், கண்டோர் களிக்கவும் அம்மலரிடையே அவ்விதழ்கள் உலாவி வருதல் போன்று பெரும்புலவோர்க்குக் காட்சி தந்தருளும். இதழ்கள் உலாவி அசைதலின் அம்மலர் நன்கு மலர்ந்த மலரேயாகும். அம்மை என்றும் பிரியாது அமரும் மலர் ஆதலின் அன்றலர்ந்த மலர்போல என்றும் வாடா இளமையோடு வாழ்தல்வேண்டும். அம்மையின் இருப்பே அதனுக்கு இளமையை என்றும் உதவியது போலும். பிறவிடம் எல்லாம்வன்மை ஏற்றன ஆதலின் அவற்றினை ஒழிந்து நீரிலெழுந்த மெல்லிய மலரிலே வாழும் மெல்லியலின் மெல்லிய தோள்கள் எத்துணை மெல்லியன! அவ்வருளின் மென்மையை அறிந்து தழுவுவான் அறிவுவடிவான ஆண்டவனே ஆவன். தாயானவள் பிள்ளையை அணைப்பது எதனைக் கொண்டு? தோளினைக் கொண்டேயன்றோ? தாயின் அன்பினைத் தோளும் மார்புமே காட்டுகின்றன. மணாளனுக்கும் அவையே அன்பொடு இன்பமாவன: அருளொடுபுணர்ந்து நிற்கின்றான் ஆண்டவன். ஐம்புல இன்பந்தரும் மலரிடையே அவ்வின்பத்தை நுகரும் அன்பு வடிவாம் கண்கவர் வனப்பும், கடவுள் மணத்தையும், காற்றில் பறக்கவிட்ட திருமணமும், குழலையும் பழித்த குதலைமொழியும், தேனொடு பால்கலந்தன்ன வாலெயிறூறிய நீரெனப் புலவர் புகழும் அறிவுமொக்குளில் உள்ளூறிய இன்பத்தேனும், மலரினும் மெல்லிய மயிலியன் சாயலும், ஆண்டவனறிவினாலும் அளத்தலாகாத அருளுடைய மனமும் உடையாளாய், இவ்வறுபுல இன்பத்தினையும் இறைவன் இனிதே துய்க்க அவனொடும் இணைந்தருளி நிற்கின்றாள். இவ்வாறு அறிவன், அருளொடு புணர்ந்துநின்ற நிலையைச் 'சேர்த்தி' "கூட்டம்" என்று சொல்ல ஒண்ணாது. வாலறிவன் அவ்வருளில் தோய்ந்தேவிட்டான். தேனிற்றோய்ந்த தீமாங்கனியின் புரைபுரை தோறும் தேன் நிறைந்து திகழ்தல்போல, அறிவானது அருளிலே தோய்ந்து புரைபுரைதோறும் அருள் கனிந்தொழுக அம்மையை அப்பன் அணைந்தருளினன். நீரிடை இன்பம், உலகத்தே உடல்தரு இன்பம், நீரெழுந்த மலரிடை இன்பம், மக்கள் மனத்தெழு இன்பம், மலரெழுந்த மங்கையி னின்பம், வாலறிவினின் உண்மையறிவான இன்பம், மும்மையின்பமும் முழுப்பொருளாய் விளங்கு நிலையை ஓவியமாக இதுபோல எழுதுவோர் உண்டோ? அறுபுல இன்பமும் வாடா இளமையும் நம் கண்ணெதிரே கூத்தாடுகின்றன வன்றோ? இவ்வருள்நிலையை எண்ணுந்தோறும் இப்புன்புலால் யாக்கை புரைபுரை கனிந்துருகு மன்றோ? என்புத்துளைதொறும் இன்பத்தேன் பாயாதோ?

சுடர்வாளியால் நீடு மாமரம் செற்றதும்:—

பழத்தின் சுவையினை உண்டு களித்தல் வேண்டும். அருட்சாறொழுகும் இவ்வறிவுக் கனியினை உண்ட பேர் உண்டோ? நமக்குப்பயன்படாது போயினால் அக்கனி நல்ல கனியானால் என்னை; உயர்ந்த கனியானால் என்னை? ஆனால் பயனே வடிவான பண்ணவனைப் பரிந்து தழுவி இன்பமுற்றார் ஆறறிவுடையமக்களேயல்லர். ஐயறிவுடைய மாவும் மாக்களும் அவனை அடைந்து அமைவிலாத இன்பம் பெற்றன. அன்பர்க்கு இடைச்சுவராய் நின்றாரை அழித்து மறப்பே ரருள்புரிவான்; அடியாருக்கு எளியனாய் நின்று அறப்பே ரருளும் புரிவான். உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆளும் அரசரின் அருமந்த புதல்வன் இராமன். அப்பெரியான் குரங்குகளின் அரசனாகிய சுக்ரீவனுக்கு அருள் செய்ததனை என் என்போம்! சுக்ரீவன் அறிவிற் சிறந்தவனா? திறலிற் சிறந்தவனா? மனைவியை யிழந்து வருத்த முற்றான்; அண்ணனால் நலிதலுற்றான்; இராமனே அரண் என அடைக்கலம்புகுந்து அன்பனாயினன்; அடியனாயினன். அவனைத் தேற்றி அரசனும் ஆக்கினான் இராமன்; அவனுடைய பகைவனை வானுலகனுப்பினான். இம்மறப்பே ரருளையே "சுடர்வாளியால் நீடு மாமரம் செற்றது" என்ற தொடர் நினைப்பூட்டுகின்றது. இராமனுக்கு வாலியைக் கொன்றழிக்கும் பேராற்றல் உண்டோ எனக் கண்டறிய பலபுறத்தும் இருந்த ஏழு மராமரங்களை ஒரே அம்பில் எய்யுமாறு சுக்கிரீவன் கேட்டுக்கொண்டதற் கிணங்கி அவற்றை எய்தழித்தான் இராமன். அம்மரங்களோ மிகப் பெரியமரங்கள்; மா மரங்கள், அழிவிலா நாளொடும் நீள்வன. அவற்றைச் சுடர்வாளியால் செற்றான். பண்டே துளையானவற்றிலே ஓட்டினாற்போல அம்பு விட்டான். இவன் விட்ட வாளி ஏழு மரத்தையும் எளிதில் ஊடுருவிச் செல்லத் தீயுருக்கொண்டதோ? தீச்சுடராகிய வாளியாயதோ? அம்பு பட்டதும் தீப்பற்றிய மரம்போலப் பட்டன அன்றோ? பல புறத்தும் உள்ள மரங்களை வாளி எவ்வாறு செற்றது? விட்ட அம்பு நேரே செல்லும்; அஃதொழிந்து பலவிடத்தும் வளைந்து புகுந்து போதல் எங்ஙனம் கூடும். இவ்வாறு இராமனது எண்ணத்தை அறிந்து மராமரமேழும் செற்றழிப்பதற்கு அறிவுச் சுடரகிய வாளியோ ஈது?

நிரை மேய்த்ததும்—

மாக்களுக்கு மறப்பே ரருள்புரிந்த வண்மையை நினைந் துருகியபின், மாவினத்திற்கு அறப்பொருள் புரிந்த அன்பினை நினைந்துருகுவர், அவ்வடியவர்: விலங்குகளுக்கும் மிக எளியவனான இவன் அன்பு இருந்தபடி என்னே! என்னே! தெளிந்துபாயும் நல்லநீரும் தழைத்துவளரும் பச்சைப் புல்லும் பருகவும் உண்ணவும் தந்து தந்து அவற்றின் உடலை வளர்ப்பான், குழலினி தூதி இன்பந்தந்து அவற்றின் உயிரினை வளர்ப்பான். அவற்றிற்குப் பால் கடுப்பு எடுத்தபோது பாலினைக் கன்றிற்கூட்டியும் பாலினைக்கறந்து உலகிற்கூட்டியும் அன்பினை வளர்ப்பான். அவற்றிற்குத் தினவெடுத்தால் உரிஞ்சு கல்லாய் எதிர் நின்று இன்பத்தை வளர்ப்பான். முல்லையின் மணமும் மௌவலின் மணமும் புதுமழையோடு புகுந்து பின் மண்ணிருந்தும் எழுகின்ற புது மணமும் ஒருங்கு கமழும் பச்சைப்பசேர் என்ற இடைவெளியில், முத்தினைத் தலையில்லமைத்தெழும் பசுமணி என மழைத்துளியோடு பொலியும் பசும் புல் பரந்த அழகிய இடத்தில், இழுமென நிழலில் இனிதே ஓடும் இன்ப ஓடையருகில், இளந்தென்றல் மணத்தொடு புகுந்து மரத்தில் தூங்கிய புது மழைத் துளியையும், புதுமலர்த் தேனையும், தெறித்து நிற்ப, மாலைக் கதிரவனின் பொன்னிற வெயிலும் செந்நிற வானமும் இடைநின்றபோதில் ஆவினைக் கூட்டி அவற்றின் மணியொலியே கைஒத்தாகக் குழலூதி அவை நடக்கும்போது எழுந்த தூசு படிந்த கருமணிபோன்ற திருமேனியோடு அவை கண்களிப்ப அவற்றினருகே புன்னகைகொண்டு அவற்றை நோக்கியும் தடவியும் இன்பவடிவாய் நிற்பான் அவனை யல்லாது வேறொரு இன்பமும் அறியாத அவையோ அவனது செந்தாமரையினும் மெல்லிதாய்ச்சிவந்த திருவடியை அகங்குழைந்து உடல்குழைந்து அன்போடு நாவால் மெல்ல நக்கி இவன் முகத்தை நோக்கி இன்புறவன. இவ்வாறு இவ்வானிரைக்கு எளியனான இறைவன் இன்ப அன்பினை எண்ணுந்தோறும் எண்ணுவார் மனதில் இன்பஅன்பு பாயுமன்றோ? இவ்வடிவமும் இவ்வுருவமும் அடியார் உள்ளத்தே ஒளிருமன்றோ?

இவையே நினைந்தாடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும்—

இவற்றை நினைப்பார் படும்பாடு சொல்லவும்வேண்டுமோ? இறைவன் தன் எண்ணில்லாத பண்புகளில் இவ்வடியார்கள் இவ் வன்புவடிவான செயல்களையே நினைப்பர். இவர்கள் வேண்டுவதும் இவ்வின்ப அன்பேயன்றோ? அவன் செல்வத்தினை இவர்கள் வேண்டார் அவனது அளவில் ஆற்றலையும் இவர்கள் வேண்டார்; அவன் அன்பொன்றினையே ஆருயிர்த்துணையாக வேண்டுவர்; நினைப்பர்; நினைந்து நினைந்து தம்மை மறந்த அளவில், நினைவும் கனவும் அறியாது ஆடுவர்; அதற்கேற்பத் தம்முயற்சி இன்றியே பாடுவர். "ஓ அரங்கா, நின் அன்பு இருந்தபடி என்னே என்னே! அரங்கா! அரங்கா!" என்று அவனை வாய்விட்டழைப்பர்.

தொண்டரடிப்பொடி ஆடநாம்பெறில்
கங்கைநீர்குடைந்தாடும் வேட்கை என்னுவதே.

இவர்கள் தொண்டு இருந்தவாறென்னே! ஏதேனும் விரும்பினரோ? அதுவேண்டும், இது வேண்டும் என மன்றாடுகின்றனரோ? அவனுடைய அன்பினை நினைந்து அன்புருவாகின்றனர்: அவர்கள் உள்ளத்தே நினைந்திருக்கும் ஆண்டவன், அவர்களை நாம் காணும்போது, நம் கண்ணுக்கும் அன்பு வடிவாக விளங்குகின்றான். அவர்கள்மேல் வீசியகாற்றும் அன்பு மணக்கும். அவர்கள் காலடியில் நின்ற மண்ணும் அன்பூறும், இன்பமூறும், அறிவூறும். கடவுளின் இன்பக்கூத்தை என்றும் அங்குக் காணலாம். அங்குத்தான் குரவைக்கூத் தாடுகின்றான். அந்தக் காலடி மண்ணில் புரண்டாலும் கடவுளுடன் இன்பக் கலவி எய்துவோம். அதிலே குளித்தால் உடல் தூசு பட்டாலும் உள்ளந் தூயதாகும்; உயிர் தூயதாகும்; உடலும் குன்றா உரம்பெறும். இதை விட்டுப் புறத்தூய்மை ஒன்றே தரும் கங்கை முதலிய ஆற்றில் குடைந்து குடைந்து ஆடிப் பயன் என்ன? பெண்களோடு குடைந்தாடிப் பெரும்பழியே பூணுவோம். சில்லென்றோடும் பனியாற்றில் குடைந்து குடைந்து ஆடும்போது நாம் பெறும் ஊற்றின்பத்தை இந்த மண்ணில் புரண்டாலும் யாம் பெறலாமே! பின் கங்கையில் ஆடவேண்டும் என்ற அவா எதற்கெழவேண்டும். காலடி மண்ணொன மணங்கூச ஒண்ணுமோ? கங்கைநீரும் கடவுளின் காலைக் கழுவிய நீர்தானே? சானு முனிவரின் காதுவழியாக வந்து எச்சில் பட்ட நீர்தானே; பகீரதனின் முன்னோரின் எலும்பின் மேலோடிய சுடுகாட்டு நீர்தானே! இன்றளவும் சிவனாரின் சிக்குத்தலையில் புகுந்து தானே வருகின்றது. இதனினும் இத்தொண்டரடிப் பொடி எவ்வாறு தாழ்ந்தது? ஓரிமைப்போது இறைவனோடு கூடிய கங்கையில் விளங்குவதினும், ஓயாது இறைவனோடு இன்பக்கலவி யிலமர்ந்த அடியார்களின் காலடி மண்ணில் கடவுள் விளங்கமாட்டாரா!

நாதனை நரசிங்கனை
நவின்றேத்துவார்கள் உழக்கிய
பாததூளி படுதலால்
இவ்வுலகம் பாக்கியம் செய்ததே:
(பெரியாழ்வார்.)

அத் தொண்டரடிப் பொடியில் நாமும் அரும்பேறு பெறவேண்டி அடியார்க் கன்பராய் ஆடுவோம்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 1½ அணா.
வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

கும்பகர்ணன்.

[453 வது பக்கத் தொடர்ச்சி]

வீடணனும் படைக்கடலைத்தாண்டிக் கும்பகர்ணனை நோக்கி வருவதைக்கண்ட தூதர் சென்று அவனிடங் கூறலும் எல்லையற்ற களிப்படைந்தான். அவ்வளவில் வீடணனும் வந்து தன் தலை அவனது கால்களில் நன்றாகப் பதியுமாறு வணங்கினான். வணங்கிய வீபீடணனைத் தன் கைகளால் வாரியெடுத்து உயிராரத் தழுவிக் கண்ணீர் தாரையாக ஒழுகும்படி யழுது கொண்டு "அறிஞரின் மிக்கோய்! நம்மவரி லொருவனை நீ நல்வினைப்பயனால் உயிர் பிழைத்துப் போனாயென்று களிக்கும் என் மனம் நீ இப்பொழுது வந்ததால் மாறுபட்டுவிட்டது. இராமன் பக்கல் சென்ற நீ அறிவிலார்போலத் தனியே இங்கு வந்ததென்ன. நீ அடைக்கலம் பெற்றதையும், அமரரும் பெறாத இருமைச் சிறப்புற்றதையுங் கேட்டுக் களித்தேன்; எமனிடம் களிப்படையும் என்பால் எதற்கு வந்தாய்? அமுதுண்ட நீ விடமுண்ணுவாயா! குமர, நமது குலத்தியல்பு அழிந்து விட்டது. ஆயினும் உன்னால் இப்புலத்தியன் மரபு புண்ணியம்பெற்றதென்று என் தோள்நோக்கி மகிழ்ந்தேன். இன்று எனக்கு உன்வருகையால் வாயுலர்ந்து உள்ளமும் உலைகின்றது. தம்முயிர் போனாலும் இராமலக்ஷ்மணர், அடைக்கலம் கொடுத்த உன்னைக் கைவிடாராதலால் உனக்கு இறப்பென்பதில்லை. இராமா வென்று கூறுமளவும் பிறப்புமில்லை. இவ்வாறிருக்க நீ என் நினைந்து இங்கு வந்தனை. பிறர் மனைவியைக் காமுற்ற எங்களை உறவென்று பெறுதியோ? அருந்தவஞ் செய்து ஆதியங்கடவுளால் நீதியையும் நல்ல நிலைமையையும் அறிவையும் பெற்று, அப்பால் இராமன் வாக்கால் சிரஞ்சீவி யென்றும் பெற்றாய். இருந்தும் இன்னும் சாதியின் இழிமையையும் விட்டிலையோ.

> ஏற்றிய வில்லோன் யார்க்கு
> மிறையவ னிராம னின்றான்
> மாற்றருந் தம்பி நின்றான்
> மற்றையோர் முற்றும் நின்றார்
> கூற்றமும் நின்றது எம்மைக்
> கொல்லிய விதியும் நின்ற
> தோற்றவெம் பக்க லைய
> வெவ்வலி தொலைய வந்தாய்.

ஐயனே! இராமனிடம் சொல்லாது வந்தாயானல் அரக்கரனைவரும் இராமபாணத்தா லிறந்தபின் தன் கையால் எள்ளும் நீரும் இறைத்துப் பிதுர்க்கடன் கழிக்க உன்னையன்றி வேறு ஒருவனைக் காட்டுக. இப்புன்மையோர் மாண்டபின்னர் இராமபிரானொடு இலங்கைக்கு வந்து ஒப்பிலாப் பெரிய செல்வத்தையும் அனுபவிப்பாயாதலால் நீ விரைவில் இராமனிடம் போய்விடு" என்று கூறினான்.

இவைகளனைத்தையும் கேட்ட விபீடணன் "ஐய! மூவர்க்கும்முதன்மூர்த்தியான இராமனிடம்நீவந்தால் அருள்செய்வான்; எனக்குத் தந்த செல்வமனைத்தையும் யான் உனக்குக் கொடுத்து நின் ஏவற்றொழில் ஈண்டு நிற்பேன்" என்ற தொடக்கத்தன பல நீதிகளை எடுத்துக் காட்டி இராமனிடம் வரவேண்டு மென்று கூறி அவன் பொன்னடியில் மறுபடியும் விழுந்தான். "தும்பியந் தொடையல் மாலைச் சுடர்முடி யடியில் தோயப் பம்புபொற் கழல்கள் கையால் பற்றினன் புலம்பும் பொற்றோட் தம்பியை யெடுத்து மார்பில் தழுவித்தன் தறுகணோடு வெம்புணீர் சொரிய நின்றான். இனையன விளம்பலுற்றான்.

> தார்க்கோல மேனி மைந்த!
> நீர்க்கோல வாழ்வை நச்சி
> நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
> போர்க்கோலஞ் செய்து விட்டார்க்கு
> உயிர்கொடா தங்குப் போகேன்

என் துன்பத்தை நீ தவிர்ப்பாயாயின் விரைவில் இராமனிடஞ் சேர். பிரமனின் தவறாத வரத்தால் நிலைத்த தருமநெறியை யடைந்தாய்! உலகுள்ளளவும் சிரஞ்சீவியாயிருப்பாய். எவ்வுலகிற்கும் நீயே தலைவன். மேன்மையான உனக்கே அவ்வடைக்கலம் தகுதி. முன்னோனுக்காக எளிமையுற்று இறத்தலே எனக்குப் புகழாகும். நல்லறிவில்லாத் தலைவன் தீமைசெய்ய நினைத்தால் அதனைத்தடுத்துத் திருத்தினால் நன்மையாகும். (பொறாத்தாற பொருளுண்டாமோ.) இல்லையேல் அவன் போர்செய்யத் தலைப்படுமுன் இறத்தலே சேனைகளுக் குரியதாகும்

சேனையுடன் சுற்றத்தாரும் தேவரும் பிறரும் போற்ற மூவுலகையும்ஆண்ட இராவணன் தன் தம்பியரின்றி இராமபாணத்தால் மாண்டு கிடத்தல் தகுமா. கைலயங்கிரி யெடுத்த இராவணன் தோள்கள் காலபாசத்தாற் பிணிக்கப்பட்டுத் தம்பியரின்றி முன்தன்னால் தோற்கடிக்கப்பட்ட எமபுரம் செல்லுதல் நமக்கு நல்லதாகுமா? அவ்வாறு சென்றால் முன் தோற்றவர்கள் நகைப்பா ரன்றோ. ஐயா! யான் முன்பு எமனையும் நாட்டிய மாட்டிப் பார்த்தேன். இலங்கையின் எல்லாச் செல்வங்களையும் அனுபவிக்கவேண்டி என் தமையனைக் கொன்ற பகைவனை வாழ்த்திப் புண்ணுடைய நெஞ்சொடு யான் கும்பிட்டு வாழமாட்டேன்.

> அறுபனை வாலி சேயை
> யருக்கன்சேய் தன்னை அம்பொற்
> றனுவுடை யவரை வேறோர்
> நீலனைச் சாம்பன் றன்னைக்
> கனிதொடர் குரங்கின் காலக்
> கடலொடு கடந்து மற்றப்
> பனிதுடைத் துலகஞ் சுற்றும்
> கதிரெனத் திரிவன் பார்த்தி

ஆலகால விஷத்தைக் கண்டோடும் அமரரைப்போலக் குரங்குக ளோடும்படி இடசாரிவலசாரி செய்வேன் பார். இராமலக்ஷ்மணரைத் தவிர மற்றவர் போர்க்களத்தில் வந்து என்னுடன் எதிர்ப்பாராயின் அவர்களை உயிர் சுமந்து உலகத்தில் திரிய விடமாட்டேன். வீடணா! காலந்தாழ்க்காதே; என் சொல் தலையால் தாங்கத்தக்கதென்று கொள்வாயாயின் இராமலக்ஷ்மணரோடு நட்புக்கொண்டு களிப்படைவாய். அனைவரும் உன்னைத் தொழுவார்கள். நீயோ அப்பால் இறந்தவர்க்கெல்லாம் இராமனது மதியால் வேத முறைப்படி உரிமைக்கடன்களைச் செய்து நரகமடையாவாறு காத்துக்கொள். சிரஞ்சீவியே!

> ஆகுவ தாகுங் காலத்தும்
> அழிவது மழிந்து சிந்திப்
> போகுவ தயலே நின்று
> போற்றினும் போதல் செய்யும்
> சேகற வுணர்ந்தோர் நின்னின்
> யாருளர் வருத்தல் செய்யாது
> எழுதியெம் மைநோக்கி இரங்கலை

என்று கூறி மறுபடியும் வீபீடணனைத்தழுவி முன்னின்று அவனை நோக்கிக் கண்ணீர் சொரிய ஏங்கி ஏங்கி யழுதான். அப்பால் 'இன்றையோடு உனக்கும் எனக்குமுள்ள உடன்பிறப்பென்ற ஆசை நீங்கியது.' என்றான். உடனே வீபீடணனும் கும்பகர்ணனடியில் விழுந்து வணங்கி இனிமேல் இவனிடம் சொல்லிப் பிணங்குவலாவதில்லை என்றுஇராமனிடம் சென்றான்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

13. எழுச்சிப் படலம்.

[478 வது பக்கத் தொடர்ச்சி]

ஆசையு மடையும் பொருளின் பெருமையை.

காலென்ன வாயென்ன கையற்ற நிலையென்ன இவையன்ன உபாயங்களால் தம் காதல் நிறைவெய்துமாறு கடைப்பிடித்தடைந்த புது வெற்றியை விளம்புவார்போல் செம்மாந்து சென்ற அவ்வீரர்,

> கேடகத் தடக்கை யாலே கிளரொளி வாளும் பற்றிச்
> சூடகத் தளிர்க்கை மற்றைச் சுடர்மணித் தடக்கை பற்றி
> யாடகத் தோடை யானை யழிமதத் திழுக்க லாற்றிற்
> பாடகக் காலி னாரைப் பயப்பயக் கொண்டு போனார்.

[கேடகம் தரித்த தம் இடக்கையிலேயே பிரகாசிக்கின்ற ஒளியை உடைய வாள்களையும் மாற்றிக்கொண்டு, பிரகாசிக்கின்ற இரத்தினாபரணங்க ளணிந்த வலக்கையினால், நாயகியின் வளையையணிந்த தளிர்போன்ற கையைப் பிடித்துக் கொண்டனராய்ப், பொன்னாற் செய்த நெற்றிப்பட்டத்தை அணிந்துள்ள யானைகளினின்று சொரிகின்ற சேற்றினூடே, பாடகம் அணிந்த பாதங்களையுடைய அந்நாயகியர்களை மெல்லமெல்ல அழைத்துக்கொண்டு போனார்]

சென்றஇவர் தம்மு னாரையாடற்குச் சொற்கள்தாம் எளிதில் வாய்த்திராவென எண்ணுகின்றோம். காரிய முறையிலும் வம்பின்வகையிலும் வார்த்தைகள் மேன்மேல்வளர்வதுபோல் காதலர்கூட்டத்தில் தொடர்வது அருமை. "நின்பால் எனக்குள்ள ஆசைக்கோ அளவில்லை" என்று இவனும், "நின்பால் எனக்குள்ள ஆசையும் அன்னதே" என்று அவளும் எத்தனை முறைதான் மாறிமாறிச் சொல்வது! கூறியது கூறலென்னுங் குற்றம் காதலர்மாட்டு அதிகங் காணலாம். ஆயினும், அக்கூற்றிற்குமோர் அளவுண்டு. அதன்பின் நைகின்ற நிலையிலும் எய்கின்ற நோக்கிலும் பொருள்பல தெரிவிக்கலாமெனினும் நாக்கொண்டு சில செப்பல் முடியாத தாகிவிடுகின்றது. இன்னதோர் நிலையின் அருமையினைக் கம்பர்,

> சித்தி ரத்தடந் தேர்மைந்தர் மங்கையர்
> உய்த்து ரைப்ப நினைப்ப வுலப்பில
> ரித்தி றத்தின ரெத்தனை யோபலர்
> மொய்த்தி ரைத்து வழிக்கொண்டு முன்னினார்.

[சித்திரங்களமைந்த பெரிய தேரின்கண் மைந்தரும் மங்கையரும், யோசித்து யோசித்துச் சொல்வதற்கு நினைக்கின்ற நினைவுகளில் குறைவற்றவர்களாகிச் சென்றனர். இப்படிப்பட்டவர் எத்தனையோபலர் நெருங்கி ஆரவாரம் செய்து நடப்பவரும் ஆயினார்]

என அழகுறக் காட்டினர். காதலின் புதுநல மெய்தி வழிக்கொள்வாரும், பண்டறிந்த காதலேனும் பயிலுந்தோறும் விருந்தென நுகர்ந்தனராய்த் தேரினிற் செல்வாரும், இருதிறத்தோறும் உய்த்துரைக்கத்தக்கவை எவையென நினைப்பதில் தளரா ராயினார். முயன்று நினைத்தன பலவாயினும் உரைக்கும் நீர்மையன வொன்றும் அவர்க்கு நேர்ந்திலது. இனி என்செய வென்று சோர்கின்ற வமையங்களிலோ, யாதானுமொன்று உரைத்தாற் போதுமெனுங்கொள்கையால் அம்மங்கையர், நெறிப்பட்ட

> செய்களின் மடுவி னன்னீர்ச்
> சிறைகளி னிறையப் பூத்த
> நெய்தலுங் குமுதப் பூவு
> நெகிழ்ந்தசெங் கமலப் போதும்
> கைகளு முகமும் வாயுங்
> கண்களுங் காட்டக் கண்டு
> கொய்தவை தருதி ரென்று
> கொழுநரைத் தொழுகின் றாரும்

[வயல்களிலும் மடுக்களிலும் நல்நீரையுடைய தடாகங்களிலும் நிறையப் பூத்திருந்த நெய்தற்பூவும், குமுதப் பூவும், மலர்ந்த செந்தாமரைகளும் ஆகிய இவை தங்கள் கைகள் முகம் வாய் கண்கள் ஆய அவயவங்களைப்போல் தோன்ற அவைகளைக்கண்டு, 'இம்மலர்களை எமக்குப் பறித்துத் தருவீர்' என்று தம் கணவரைத் தொழுகின்றவரும்]

ஆயினார். பேசுதற்கொன்றும் புலப்படாத இடுக்கண்வேளைகளில், மணியெத்தனை, மழை பெய்யுமோ என்று சிலர் வினவுவதைப்போலவே, மலர் கொய்து தருமாறு வேண்டினோர் இவர் கதியும் ஆயிற்று.

இன்னதன்மையர் ஏகுவாரிடைக் குறும்புமதி மிக்க இளைஞரும் சிலர் இருந்தனர். பாம்புபாம்பெனப் பின்னிருந்து கூவிக் கலக்கங்காணும் பரிகசச் செய்தியும் அச்சேனையுள் நிகழ்ந்ததென்பதைக் கம்பர்,

> பந்தியம் புரவி நின்றும் பாரிடை யிழிந்து வாசக்
> கொந்தள பாரஞ் சோரக் குலமணிக் கலன்கள் சிந்தச்
> சந்தநுண் துகிலும் வீழத் தளிர்க்கையா லணைத்துச் சார
> வந்தது வேழ மென்ன மயிலென விரியல் போவார்

['யானை நெருங்கி வந்துவிட்டது' என்று சிலர் அசதியால் கூற, அதனைக் கேட்ட மாதர், வரிசையாகச் செல்கின்ற குதிரைகளை விட்டுப் பூமியில் இறங்கி, வாசனை பொருந்திய பூங்கொத்துகள் அணிந்த கூந்தல் சோரவும், சிறந்த இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்கள் சிந்தவும், அழகிய நுண்ணிய ஆடை அவிழவும், அவைகளைத்தம் கைகளால் அணைத்துக்கொண்டு நிலைகெட்டு மயிலைப்போல் ஓடுவார்]

என்ற சூழ்ச்சியால் காட்டுவார். வீழ்கின்ற துகிலோடு சேர்த்துத் தம் தளிர்க்கையா லணைத்த பெற்றியைச் சொன்ன திறத்தினால் இம்மங்கையர் தம் மானத்தைப் போற்றும் பெருமை தெரியலாகின்றது. அச்சத்தால் ஓடும் இவர் உயிர்க்கோர் இடையூறு உற்றதென உன்னிய காலையிலும் நாணத்தை உகுக்காமல் காத்த விதம் நன்று. எனினும், ஆசையால் ஓடுங்கால் நாணமும் நழுவி விடுமென்னக் காட்ட நினைத்தார்போல் கம்பர் பின் (உலாவியற் படலத்தில்) வீதிவாய்ச் சென்ற இராமனைக் காட்சிகொள்வான் விரைந்து முன்னிய மிதிலைமாதர்,

> விரிந்துவீழ் கூந்தல் பாரார் மேகலை யற்ற நோக்கார்
> சரிந்தபூந் துகில்கள் தாங்கா ரிடைதடு மாறத் தாழார்

என விளம்பினர். அச்சம் ஆசை இரண்டும் ஒருவரை அவர்தம் நிலைபிறழ வைக்கும் நிமித்தங்களேனும், அச்சத்தினகவயின் காப்பதற்கியன்றதாய அற்றமும் ஆசையினலைப்பினிடையே காக்க இயலாததாம். இவ்விதம் நம் புலவர்பிரான், அச்சமுற்ற மாதருக்குத் துகிலை உடுத்தியும், ஆசையுற்ற மாதருக்கு அதனை உரிந்தும் காட்டியவாற்றால் தன்னுடைய நுண்ணறிவையுங் காட்டினாரெனினும், சரிந்த பூந் துகிலைத்தாங்காது தன் மனையினின்று உலாவரு மவ்வரசக்குரிசிலைக் காணுமவாவினோடு விரைந்து வந்தாளொருத்தி "புனைந்தன வெல்லாம் போகத் தன்னையுந் தாங்கலாதாள் துகிலொன்றுந் தாங்கி நின்றாள்" என்னும் சித்திரம் அந் நுண்மையின் நுண்மையைப் பின்னும் விளக்கிப் பொலிகின்றது. ஆசை யென்பது தன்னளவிலே பொல்லாததெனினும் அதனால் வரும் நலமுந் தீமையும் பெரும்பான்மை ஆசைப்படும் பொருளின் தன்மையைப் பொருந்தியதாகும். காண வருங்காலையில் நாணமும் பிரிந்தது. கண்டது தூய்மையின் மூர்த்தியாய இராமனையே யாதலால் பிரிந்திருந்த மானம் மீண்டதாகித் தன்னையே தாங்கலாதாளும் துகிலொன்று மட்டும் தாங்குபவ ளாயினாள். ஒன்றினையும் நாடாமல் தேடாமல் நிற்கின்றவோர் மனதற்ற நிலை மாந்தர்க்கெய்துதல் எளிதன்று. மற்று, அதனைத்

தூய்மையின்பால் மேன்மையின்பால் மடைமாற்றிப் பாய்ச்சுவது கைவருதற்கொத்த முறையாம்.

இன்னவாறு இராமனது மன்றலைமுன்னிய பரிஜனங்கள் இன்பமுந் தாமுமாய் இருபெரும் நகர்களுக்கு இடையே படர்ந்து முன்செல, அரசன் நேயமங்கையர்களும், கைகேயி சமித்திரை கௌசலை ஆகிய தேவிமார்களும் தத்தம் சேடியர் தாதியர் உழையர் எண்ணிறந்தோர் புடைசூழ முறையே எழுந்து குருமணிச் சிவகையின் வழிக்கொண்டனர். அவர்களுக்குப்பின் அந்தணர் ஈராயிரம் உடன்வர வசிட்ட மாமுனி கற்பின் பிறவிபோல்வாள் அருந்ததியினோடு முத்துச்சிவிகையில் புறப்பட்டார். கோசிகன்பின் போன இருவருமெனப் பரத சத்துருக்கனர் இருவரும் இவருக்குப் பின் ஏகினர்.

இன்னவர்களுக்குப்பின் தயரதமன்னனும், கோதானம் பூதானம் முதலிய தானங்களைச் செய்து, இருபிறப்பாளர் எண்ணுயிரர் பூர்னகும்பங்கள் ஏந்த, மயிலனைய மாதர் எண்ணிறந்தோர் பல்லாண்டிசைப்ப மங்கல முகூர்த்த நன்னுளில் புறப்பட்டுப் போயினன். இவனோடு சென்ற களிறும் தேரும் புரவியும் படைஞர் தாளும் ஆக்கிய தூளிவெள்ளம், இம்பரில் சகரரோடு பகைத்ததெனக் கடலையெல்லாம் தூர்த்தது; உம்பரில் பொன்னின் புரிந்துள விண்ணுலகையும் மண்ணுலகாக்கியது. இப்படி,

வீரருங் களிறுந் தேரும் புரவியு மிடைந்த சேனை
பேர்விட மில்லை மற்றோ ருலகில்லை பெயர்க்க லாகா
நீருடை யாடை யாளு நெளித்தனன் முதுகை யென்றால்
பார்பொறை நீக்கி னுனென் றுரைப்பதெப் பரிசு மன்னோ.

[வீரர்களும் யானையும் தேரும் புரவியும் நெருங்கிய அந்தச்சேனை செல்வதற்கு வேறோர் உலகு இல்லையாதலால், இவ்வுலகில் காலெடுத்துவைக்க இடமில்லாத தாயிற்று. இனி இச் சேனையின் பாரந் தவிர்ந்து எங்கும் போவதென்பது இயலாத பூமி தேவியும் தன்முதுகை நெளித்தனள். எனின் தயரதன் பூமியின் பாரத்தைப் போக்கினுன் என்று உரைப்பது எவ்வாறு பொருந்தும்]

என்றனர் கம்பர். "பார்பொறை நீக்கினுன்" எனத் தயரதனைப் பாராட்டியது யாரென்று கருதிக் கம்பர் இங்கு இறும்பூது எய்தினர்? வேறொருவரும் அல்லர். முன், நாட்டுப் படலத்தில் நெய்தல் திணையின் சிறப்பைக் கூறுமாற்றால்,

முறையறிந் தவாவை நீக்கி
முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கும்
இசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குந் தெய்வப்
பூதலந் தன்னிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்க
நெடுமுது காற்று நெய்தல்.

எனத் தயரதன் பார்பொறை நீக்கிய பரிசு புகழ்ந்தவர் இவரே. இதனை நோக்குங்கால் 'உரைத்தது எப்பரிசு மன்னோ' என்னும் பாடத்தைக்காட்டிலும் 'உரைத்ததும் பழுது மன்னோ' வென இருக்கின்ற மற்றோர் பாடம் பொருத்தமுடைத்து. தனதுரைக்குப் பழுது காட்டுவார்போல் கம்பர் தயரதன் புகழையே பெருக்குகின்றார் என்பது வெளிப்படை.

வர்த்தமானம்

சனாதன மஹாநாடு:—சென்றவாரம் கராச்சியில் சிந்து மாஹாண சனாதனதர்ம மஹாநாடு கூடிற்று. ஸ்ரீ மாளவியா பிரத்தியேகமான ரயில்வண்டியில் வந்து காலையில் இறங்கினார். 6 குதிரைகள் பூட்டிய வண்டியில் மேள வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார். பிறகு மஹாநாடு மாளவியா தலைமையில் கூடியது. சனாதன தர்மத்தின் பெருமையை விளக்கும் தீர்மானங்கள் சில செய்யப்பட்டன.

* * *

பம்பாய் மதுவிலக்கு மஹாநாடு·—பம்பாயில்சென்ற வாரக்கடைசியில் மதுவிலக்கு மஹாநாடு ஸர் புருஷோத்தமதாஸ் தாக்கூர்தாஸ் தலைமையில் கூடிற்று. தலைவர் மது விலக்கின் அவசியத்தை எடுத்துக் காட்டி, பிரிட்டிஷ் காபினட்டில் தொழிற்கட்சியார் இருப்பதால் மதுவிலக்கு விஷயம் அதிகம் கவனிக்கப்படும் என்றும், மதுவிலக்கு விஷயத்தில் தொழில் கட்சியாருக்குச் சிரத்தை உண்டென்றும் கூறினர்.

* * *

காந்தியடிகளின் உணவு முறை:—காந்தி அடிகள் ஆந்திரநாட்டு யாத்திரை செய்யுங்காலை, கோபால்ராவ் என்பவர் சொல்லியபடி உணவில் மாறுதல் ஏற்படுத்திக்கொண்டார். உணவுப் பதார்த்தங்களை வேகவைக்காது சாப்பிட்டு வருகின்றார். அதனால் அவர் தனக்கு எந்த விதமான சிரமமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கின்றார். ஊறவைத்த கோதுமை கொள்ளு தேங்காய்ப்பால், தேன் எலுமிச்சம்பழம் இவைகளே அவரது ஆகாரம். அவர் ஆச்ரமத்திலும் இப்புதிய முறை பரவி வருவதாகத் தெரிகிறது.

* * *

இந்தியச் சட்டசபை மண்டபத்தில் வெடிகுண்டு எறிந்த இருவரும் விசாரணை காலத்தில் தம் அக்குற்றத்தை ஒப்புக்கொண்டனர். எவரையும் கொல்வதற்கு அவர்கள் கருதினால்ல ரென்றும், அரசங்காத்தார்களுக்குத் தம்போன்றதியாகிகள் ஊரென்று தெரிவித்து, அவர்கள் கையாளும் முறைகளைவிட்டு விலகும்படி இது செய்தார்களென்றும், ஸ்டேட்மெண்ட் கொடுத்தனர். அவ்விருவருக்கும் ஆயுள்பரியந்தம் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டது.

* * *

பூதசாஸ்திர நிபுணராய் உலகெங்கும் போற்றப் பெறும் பண்டிதர் C V. ராமன் அவர்களுக்கு அரசாங்கத்தார் ஸர் பட்டம் அளித்ததை முன்னிட்டுக் கல்கத்தாவிலுள்ள தென்னிந்திய சங்கத்தார் அவருக்கு விருந்துசெய்து உபசரித்தனர். அக்காலம் அவர் பேசும்போது, இந்தியாவிலுள்ள மற்றெல்லா நகரங்களைக் காட்டிலும் கல்வியாலும் செல்வத்தாலும் பெருந்தன்மை பொருந்திய மனிதர் பலர் இருப்பதாலும் கல்கத்தாவே சிறந்ததென்றும், அதுவே செல்வத்திலும் கல்வியை உயர்ந்ததென்று மதிக்கின்றதென்றும் கூறி அந்நகரத்தின் தன்மையை நன்கு பாராட்டினர்.

1929 வருஷத்திய வால்யூம் 2. அட்டவணை

(ஜனவரி முதல்—ஜூன் வரையில்)

தலையங்கம்.

இதழ்		பக்கம்
1.	கலாநிலயம்	1
2.	வறியரோ நாம்	21
3.	உரிமையின் பொய்ம்மை	41
4.	கட்டளைக் கல்	61
5.	செய்வதிற் சொல்வதே யரிது ...	81
6.	அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம்	101
7.	புலமைக் குரிய பொய்	121
8.	கலைகளே கதி I	141
9.	,, ,, II	161
10,	,, ,, III	181
11.	,, ,, IV	201
12.	,, ,, V	221
13.	,, ,, VI	241
14.	வள்ளுவர் வாய்மை I	261
15.	,, ,, II	281
16.	,, ,, III	301
17.	,, ,, IV	321
18.	,, ,, V	341
19.	,, ,, VI	361
20	பாரதி	381
21.	இராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் சங்கீத கலாசாலை	401
22.	சொற்றொடர் ராரவாரம் I ...	421
23.	,, ,, II ...	441
24.	,, ,, III ...	461
25.	கலாநிலயம்	481

கம்பராமாயணம், பாலகாண்டம்.

மிதிலைக்காட்சிப் படலம்.

1.	இன்பத்திலே யின்பந் தோன்சொற் கவியின்பம்	12
2.	இன்பப் பொருளும் பொருளின் இன்பமும்	23
3.	காதலா லிராகவன் கார்முக மிறுத்தனன்	50
4.	பாவையிடையும் பரம்பொரு ணிலையும்...	63
5.	காதலர்காட்சி கோசிகன் உணர்வான் ...	83
6.	காதலாலோ இராமன் கார்முகத்தை யிறுத்தான்	104
7.	விரகத்திலு மெமதன்னை வேதங்களை விளம்பும்	129
8.	கொடிதென விரைந்து கூற்றினை மாற்றினுள்	154
9.	கோதமன் காதலன் ஈறிலாத கூற்றினுன்	174
10.	கம்பர் காட்டிய செங்கதிர் வனப்பு	...215

குலமுறை கிளத்துபடலம்.

13.	கலைமுறை காக்கக் கோசிகன் விரைந்தான்	254
14.	பேயு முரைத்ததோர் தூய தத்துவம்	...272
15.	தயரதன் வேண்டிலன் அயலவர் உதவி	...294
16.	பழியினிற் கஞ்சிய விழுமிய னிராமன்	314

கார்முகப்படலம்.

17.	வம்பு முளது கம்பர் திறத்தில் ...	333
18.	அழகினுக் கழகு பிறர்நலம் பேணல்	356
19.	கொடுத்தபின் கொள்ளெனற் கொடையினுக் கெல்லை	369
20.	கார்முகத் திடியினைக் கேட்டிலள் கன்னி	...387
21.	பெண்மையோ வாண்மையோ பண்பினிற் பிழைத்தது	415

எழுச்சிப்படலம்.

22.	அமைச்சர் வேண்டா வரசியன் மாட்சி	485
23.	அரிவையர் குறையல வந்தணர் நிறையே	...456
24.	ஊதியர் தருமொரு காதலி னூக்கம்	...477
25.	ஆசையுமடையும் பொருளின்பெருமையை	495

அப்பர்.

பிறப்பும் இளமையும்.

இதழ்		பக்கம்
1.	அப்பர் காலம்	5
2.	அப்பர் குடி	25
	அப்பர் திருவவதாரம்	26
3.	அப்பர் இளமையும் அவர் கல்வியும்	46

அப்பர் யௌவனமும் பல சமய ஆராய்ச்சியும்.

4.	அப்பர் யௌவனபருவத்தைப் பற்றிய பெரியபுராண வரலாறு	68
5	அப்பர் எவ்வளவு காலம் சமணரா யிருந்தாரென்பதன் ஆராய்ச்சி	85
6.	,, ,, ...	103
7	அப்பர் திருமறுமாற்றத் திருத்தாண்டகம் பாடிய நாள்முதல் சமணர் கல்லிற்பூட்டிக் கடலில் எறிந்தவரையில் நடந்த சரித்திர ஆராய்ச்சி	123

அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு.

8.	திருவதிகைக்கு மீட்சி	147
9.	தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள திருப்பதிகளுக்கு யாத்திரை ...	163
10.	தஞ்சாவூர் ஜில்லாத் தல யாத்திரை	187
11.	,, ,, ...	203
12	,, ,, ...	228
13.	திருச்சிராப்பள்ளி ஜில்லாத் திருப்பதிகள் யாத்திரை ...	243
14.	வட ஆர்க்காடு ஜில்லாத் திருப்பதிகளுக்கு யாத்திரை ...	267
15.	செங்கல்பட்டு ஜில்லாச் சிவஸ்தல யாத்திரை	288
16.	திருவையாற்றில் அப்பர் சுவானுபவமும் அவர் பாடிய தேவாரப்பதிகங்களும்	304
17.	அப்பர் திருவையாற்றினின்று பாண்டிய நாட்டுக்கேகல் ...	330
18.	பாண்டிய நாட்டு ஸ்தலயாத்திரை...	346

பெரிய புராணத்தில் காணுத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்.

19.	தென் ஆர்க்காடு ஜில்லா ஸ்தலங்கள்	367
20.	தஞ்சைஜில்லாத் திருப்பதிகளில் முற்பகுதி. சீர்காழியில் அப்பர் பாடியது முதல் திருப்பழையாறையில் சமணழித்த வரையில் ,, முதல் தொகுதி	385
21.	,,இரண்டாம் தொகுதி, மூன்றும் தொகுதி	403
22.	,,நான்காந் தொகுதி, ஐந்தாந் தொகுதி	423
23.	,,ஐந்தாந் தொகுதி	443
24	,, ஆறாந் தொகுதி	475
25.	,, ஏழாந் தொகுதி	484

ஏமாங்கதத்திளவரசன்.

5.	கண்ணிற்கொரு மண்	95
6.	,, ,, ...	112
7.	,, ,, ...	125
8.	,, ,, ...	148
9.	,, ,, ...	165
10.	,, ,, ...	183
11.	,, ,, ...	206
12.	மர்க்கட நாடகம்	228
13.	,, ,, ...	245
14.	விந்தைவலவன்	268

இதழ் பக்கம்
15. ” ” 283
16. ” ” 303
17. ” ” 323
18. மண்ணிற் கொரு கண் 344
19. ” ” 363
20. ” ” 391
21. ” ” 405
22. கோமகன் கனவு 425
23. ” ” 445
24. ” ” 467
25. பத்தினியின் பாக்கியம் 482

வில்லி பாரத விளக்கம்.

ஆதிபருவம்.

3. தோற்றுவாய் 43
4 பாயிரம் 72
5. குருகுலச் சருக்கம் 91
6. ” 109
9. சம்பவச் சருக்கம் 169
10 வாரணவதச் சருக்கம் 185
11. வேத்திரகீயச் சருக்கம் 210
12. ” 226
13. ” 248
14. திரௌபதை மாலையிட்ட சருக்கம் ... 265
15. ” 285
17. இந்திரப் பிரத்தச் சருக்கம் ... 327
18. அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் 350
19. ” 372
20. ” 395
23. காண்டவ தகனச் சருக்கம்... ... 448
24. ” 463

தத்வஞர் திறம்.

2. எபிக்திதன் (Epictetius) ... 30
5. பிளோதைனன் (Plotinus) ... 87
6. ” 115
23. பட்டினத்துப் பிள்ளையார் ... 453
24. ” 471
25. ” 487

அகப்பொருள் வரலாறு.

1. காவற் பிரிவு 10
3. பொருள்வயிற் பிரிவு 52

மாறன்பாப் பாவினம்.

14 வெண்பா 274
16 வெண்பா வினம் 293
16 ஆசிரியப்பா 309
17. ” 325
18. ,, தொடை விகற்பம் 348
19. ஆசிரியப் பாவினம்... 365
20. கலிப்பா 389
21. ,, கொச்சக வொருபோகு ... 408
22 ” பஃறாழிசைக் கொச்சகம் ... 434
23. ” அம்போதரங்க வொருபோகு வெண் கலிப்பா 446
24. ,, கொச்சகக் கலிப்பா, அக நிலை கொச்சகக் கலிப்பா, உறழ் கலி, மயங்கிசைக் கொச்சகக் கலி... 464
25. கலிப்பாவினம் 486

குலசேகரர்.

இதழ் பக்கம்
7. ஊசியின் காதில் ஒட்டை நுழைந்தது 133
8. ” 150
12. பாட்டிகதையே பாவலன் பாட்டு ... 234
16. திருநாளைப் போவர் 310
21. ” 413
22. ” 428
23 , ... 450
24. நடமாடுங்கோவில் 473
25 ” 492

தனிக் கட்டுரைகள்.

1. சந்திரை—T. N. சேஷாசலம் B. A. B. L 8
2. மேற்கின் இசைகள்—
A ஸ்ரீனிவாசராகவன் B. A. (Hons) 33
3. இக்கால இஸ்லாம்-ஜஸ்டிஸ் M. K. அக்பர் 56
4. இராமனுக்கிளையோர் இருமூவராவர்
K. இராமரத்நம் ஐயர் B A. ... 74
5. கவிதாலோகம்—R முத்தையர் ... 93
6. காதலாலோ இராமன் கார்முகத்தை
இறுத்தான் K. இராமரத்நம் ஐயர் B A. 104
7. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.
P. இராமாநுஜன் 132
8 கம்பனே வம்பனே—P. இராமாநுஜன் 152
9. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.
A ஸ்ரீநிவாஸராகவன் B. A. (Hons)... 173
10 நோக்கெனும் பாசம்—
V. நாராயணன் M A.,M. L. 195
11 சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
P. இராமாநுஜன் ... 212
12. அலகில் விளையாட் டுடையான்.
V. நாராயணன் M. A., M. L. ... 233
15. சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.
A ஸ்ரீநிவாஸராகவன் (B. A.Hons) ... 296
16. ” ” ” ... 306
17. ” ” ” ... 326
18 மாரிமுத்தின் மனைவி—ஒரு சிறுகதை.
W. V. கோவிந்தசாமி ராஜு.B A.,L T. 352
19. வறுமைப் பிணி— P. இராமாநுஜன் 371
கும்பகர்ணன்—R. முத்தையர் ... 374
20 வறுமைப்பிணி—P. இராமாநுஜன் ... 388
21. கும்பகர்ணன்—R முத்தையர் ... 412
23. ” ” ” ... 451
25. ” ” ” ... 464

பிற விஷயங்கள்.

7. சீர்திருத்தம் ("Man, The Reformer") 135
8. ” ” 153
9. ” ” 167
10. ” ” 193
13. மலர்வனம்:—"இன்னுமோ ராயிர மியம்புவேன்"—மதுகரம் ... 252
16. ” விதியுங் கதி பெற்றது... 316
17. அகத்திய முனிவர் அருளிச் செய்த ஆறெழுத்தந்தாதி—மதிப்புரை ... 331
22. பழமுதிர் சோலை:—
வானம்பாடிக்குரைத்த வார்த்தை —சபரி 437

தமிழ்ப்பாடம்.

[களவெண்பா, கலிநீங்கு காண்டம்.]

பக்கங்கள்:—3, 28, 48, 66, 89, 111, 127, 145, 171, 190, 213, 231, 250, 270, 290, 312, 335, 355, 376, 393, 409, 430, 454, 469, 489.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் — **கலா நிலயம்** — செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலர், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நிஷேன் எபிகூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலகிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—			
பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு	ரூ 9—8—0
ஆப்லெதர் கில்டுபயின்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு	ரூ 11—8—0
காலிகோ பயின்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு	ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

KALANILAYAM.
REG. NO. M, 2324.

எம் சொந்தப் பிரசுரங்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

கோபால் புதிய தமிழ் வாசகம்.

ஆ. மா. ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

	ரூ.	அ.	பை.
1-ஆம் வகுப்பு	0	2	6
2-ஆம் வகுப்பு	0	3	0
3-ஆம் வகுப்பு	0	4	0
4-ஆம் வகுப்பு	0	4	6
5-ஆம் வகுப்பு	0	6	0
ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது	0	5	0
சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது	0	5	0
கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது	0	5	0
சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது	0	5	0
ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது	0	5	0
தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது	0	4	0
கோபால் வாய்ப்பாடு	0	1	0
புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) ஏ. பரசுராமய்யர் எழுதியது.	0	10	0
கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது	0	8	0
பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது	0	6	0
பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது	0	6	0
சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது	0	12	0
இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது	0	6	0
முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது (அச்சில்)	0	6	0

English publications.

English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T.,	0	12	0
Nanda the Paraiah Saint by. C. S Rangaswami Iyengar B.A., L.T.,	0	8	0
Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T.,	0	8	0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. G. PAUL & Co.,
Publishers.
Francis Joseph Street, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவ மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சிமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதிசயம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)